# வைப்பகம்

2025 ஏப்பிறல் - யூன் மலர் 9 இதழ் 04 - 06

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 80/-

பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான கணியம்சார் நுட்பங்கள்

இலங்கையில் நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு

பசுமை முறிகளின் கட்டமைப்புசார் அம்சங்களும் ஓய்வூதிய நிதியங்களுக்கான அதன் ஏற்புத்தன்மையும்

இலங்கையில் வங்கித்தொழில் துறையில் நிறுவன ஆளுகையை மேம்படுத்தல்

0 04425 44117 2

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் கட்டுரையாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்




# பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான கணியம்சார் நுட்பங்கள்

**கே ஏ டி ஏ ஏக்கநாயக்க**
மூத்த முகாமையாளர்
பொதுப் படுகடன் திணைக்களம்

## 1 அறிமுகம்

*"உலகம் எவ்வளவு பழமையானதோ படுகடனும் அவ்வளவு பழமையானது"*

பொதுப் படுகடன் முகாமைத்துவம் பல்வேறு காரணங்களுக்காக சிறந்த ஒன்றாக விளங்குகின்றது. பல்வேறு வகையிலான அரச பிணையங்களை வழங்குவதன் மூலம் அரசாங்கங்கள் தமது வரவுசெலவுத் திட்டத்திற்கான நிதியிடல் இடைவெளியை ஈடுசெய்வதற்கு கடனைப் பெற்றுக்கொள்ள முனைகின்றன. அரசாங்கங்களின் கடன் நம்பகத்தன்மை, சாதனங்கள், சந்தைகள் மற்றும் பொருளாதார நிலைமைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகள் மீது இத்தகைய அரச பிணையங்களுக்கான விலையிடல் தங்கியுள்ளது. நிலையுறுதியின்மையானது அரசாங்கங்களின் இறை மற்றும் நாணய உறுதிப்பாடுகளுக்குக் கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்தி பொருளாதார, நிதியியல் நெருக்கடிகளையும் மனிதாபிமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் என்பதால், அரசாங்கங்கள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்குப் பொதுப் படுகடனை நிலையான மட்டத்தில் முகாமைசெய்வது இன்றியமையாததாகும். கடந்த அண்மைக் காலங்களில், பொதுப் படுகடன் மற்றும் அதன் முகாமைத்துவத்தின் நிலையுறுதியின்மையினால் ஏற்பட்ட விளைவுகளை இலங்கை அனுபவித்திருந்தது.

ஆகவே, அரச பிணையங்களின் வகைகள், விலையிடல், தொடர்புடைய இடர்நேர்வுகள், படுகடன் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும் விதம் மற்றும் அத்தகைய படுகடனை முகாமைசெய்வதில் இடர்நேர்வுக் காரணிகளை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய சில கணியம்சார் நுட்பங்கள் போன்ற விடயங்களைச் சுருக்கமாக இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.


## 2 பொதுப் படுகடன் சாதனங்கள் பற்றிய அறிமுகம்

2.1 அரசாங்கங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு படுகடன் சாதனங்களின் வகைகளை வழங்குவதன் மூலம் படுகடனைத் திரட்டுகின்றன. திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் வட்டி வீதப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் போன்றன இதில் உள்ளடங்குகின்றன. பயன்படுத்தப்படும் படுகடன் சாதனத்தின் தெரிவு பல்வேறு காரணிகளில் தங்கியிருக்கின்றது. அவற்றில் சில காரணிகள் கீழே வரைபடம் 1இல் தரப்பட்டுள்ளன. இதற்கமைவாக, அரசாங்கம் அதன் படுகடனைத் திரட்டுவதற்கு எவ்வகையிலான எப்படுகடன் சாதனம் பயன்படுத்தப்படுகின்றது என்பதைத் தீர்மானிப்பதில் தவணைக்காலம் முக்கிய பங்காற்றுகின்றது.

### 2.2 முக்கிய படுகடன் சாதனங்கள் பற்றிய சுருக்கமான விபரணம்

அரசாங்கங்கள் நிதியங்களைத் திரட்டுவதற்கு மூன்று பிரதான பிணைய வகைகளைப் பயன்படுத்துகின்றன.

வரைபடம் 1: படுகடன் சாதனங்களைத் தெரிவுசெய்தல்




(i) ***திறைசேரி உண்டியல்கள்:*** இவை ஒரு ஆண்டுகால முதிர்ச்சியை விடவும் குறைவாகக் குறுகிய கால கழிவுசெய்யப்பட்ட சாதனங்கள் ஆகும். மேலும், மீட்பின் போது 1 கொடுப்பனவுடன் கழிவில் வழங்கப்படுகின்றன. திறைசேரி உண்டியல்கள் பிரதானமாக அதன் குறுகிய கால தன்மையின் காரணமாக அரசாங்கத்தின் காசு முகாமைத்துவத்திற்கும், சந்தை அபிவிருத்தியின் தொடக்க கட்டத்திலும் கூட வங்கிகளுக்கான அதன் வர்த்தகம்செய்யக்கூடிய தன்மை மற்றும் ஈர்ப்புத்தன்மை காரணமாக படுகடன் முகாமைத்துவத்திற்கும் அதேபோன்று நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் இறை நிதியிடலுக்கான நோக்கங்களுக்கும் இவை பயன்படுகின்றன.

(ii) ***திறைசேரி முறிகள்:*** திறைசேரி முறிகள் முதலீட்டுப் பிணையங்கள் ஆகும். முதலீட்டாளர் கிரமமான வட்டிக் கொடுப்பனவின் கைமாறாக நிர்ணய காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்திற்குக் கடன்வழங்குகின்றார். முதலீடானது முறியின் முடிவடையும் காலப்பகுதி முழுவதும் நிலையான கொடுப்பனவுகளை ஈட்டிக்கொள்வதனால், இவை "நிலையான வருமானப்" பிணையங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இது நிலையான வட்டி வீதமாக இருக்க வேண்டிய அவசியமில்லை, மாறாக கொடுப்பனவுசெலுத்தும் முறையும் காலஇடைவெளியும் நிலையானதாகக் காணப்படுகின்றன. அவற்றின் முதிர்ச்சி பொதுவாக ஆண்டொன்றினை விடவும் அதிகமாக இருக்கின்றது.

(iii) ***நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்:*** அரசாங்கத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு, பழைய படுகடனைத் தீர்ப்பதற்கு, நடைமுறையிலுள்ள படுகடன் மீது வட்டியைச் செலுத்துதல் மற்றும் ஏனைய அரசாங்க செலவிடல் தேவைகள் போன்றவற்றுக்கு நிதியைத் திரட்டுவதற்கு அரசாங்கங்கள் தமது சொந்த நாணயத்திலிருந்து வேறுபட்ட நாணயமொன்றில் மற்றும் வேறுபட்ட நியாயாதிக்கமொன்றில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குகின்றன.

பொதுவாக, பின்வரும் காரணங்களுக்காக முறிகள் அரசாங்கத்திற்கான பிரதான நிதியிடல் சாதனமாக விளங்குகின்றன:

(i) உண்டியல்கள் காசு முகாமைத்துவத் தேவைகளுக்கானவையாகும் என்பதுடன் காசு மிகைகளின் காலப்பகுதியைக் காசுப் பற்றாக்குறைக் காலப்பகுதியுடன் இணைப்பதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதுடன் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு அவற்றின் தேறிய பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(ii) ஒட்டுமொத்த நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு முறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

முறிகளை வழங்குவதன் மூலம் நிதி திரட்டுவது அரசாங்கமொன்றிற்கு எவ்வளவு முக்கியமோ, அதேயளவு முதலீட்டாளர்களுக்கும் முறி விலையிடல் மற்றும் வருவாய் வீதத்தில் அதேபோன்று ஆர்வம் காட்டுகின்றனர். முறியொன்றின் விலை அதன் எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியாகும் என்பதுடன்

அதைக் கணக்கிடும் முறை கீழே வரைபடம் 2இல் தரப்பட்டுள்ளது.

**வரைபடம் 2: கணக்கிடும் முறை - சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது**

$$PV = \frac{C_1}{(1+y)^1} + \frac{C_2}{(1+y)^2} + \cdots + \frac{C_N}{(1+y)^N} + \frac{FV_N}{(1+y)^N}$$

இச்சமன்பாட்டில் :

- PV = முறியின் தற்போதைய பெறுமதி, அல்லது நடப்பு விலை
- $C_i$ = காலப்பகுதியொன்றிற்கான நறுக்கு கொடுப்பனவு
- FV = முதிர்ச்சியில் செலுத்தப்படும் எதிர்காலப் பெறுமதி, அல்லது முறியின் முகப்புப் பெறுமதி
- $Y$ = முதிர்ச்சிக்கான விளைவு
- N = முதிர்ச்சிக்கான காலப்பகுதிகளின் எண்ணிக்கை

முதலீட்டாளரொருவரைப் பொறுத்த வரையில், முதிர்ச்சிக்கான விளைவு என்பது முறியொன்றில் மேற்கொள்ளப்படும் அவரின் முதலீடு மீதான வருவாய் வீதமாகும். வருவாய் வீதத்தைக் கணக்கிடும் போது பல்வேறு முக்கிய ஊகங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. இத்தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.


(i) முதலீட்டாளர் முதிர்ச்சிக்காக முறியை வைத்திருத்தல்


(ii) முறி வழங்குநர் அனைத்து நறுக்கு மற்றும் முதன்மைக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளுதல்.

(iii) நறுக்குக் கொடுப்பனவுகளை அதே விளைவு வீதத்தில் மீள்முதலீடு செய்வதற்கு முதலீட்டாளருக்கு இயலுமாகவிருத்தல்.

சுருக்கமாக, முறி விலை மற்றும் முறி விளைவு வீதம் இரண்டிற்குமிடையிலான தொடர்பு கீழே வரைபடம் 3இல் தரப்பட்டுள்ளது. வரைபடம் 3இற்கமைவாக, முறி விலைக்கும் முறி விளைவிற்கும் நேர்மாறானதொரு தொடர்புள்ளது என்று அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, முறி விலைகள்

**வரைபடம் 3: முறி விலைக்கும் முறி விளைவிற்குமிடையிலான தொடர்பு**




அதிகரிக்கின்ற போது, அவற்றின் விளைவு வீதங்கள் குறைவடைகின்றதுடன் முறி விலைகள் குறைவடைகின்ற போது அவற்றின் விளைவுகள் அதிகரிக்கின்றன. வட்டி வீதத் தளம்பல்களின் மூலம் இத்தொடர்பு முதன்மையாக உந்தப்படுகின்றது.

### 3 கடன்பெறும் முறைகள்

3.1 பல்வேறு முறையியல்களைப் பயன்படுத்தி அரசாங்கங்கள் படுகடனைத் திரட்டுகின்றன. வழக்கமாக, குறித்த அரசாங்கமொன்றின் படுகடன் முகாமைத்துவக் குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டு, நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ மூலோபாயமொன்றை அது தீர்மானிக்கின்றது. பொதுவாக, நடுத்தர காலம் தொடக்கம் நீண்ட கால இடைவெளியில் செலவையும் இடர்நேர்வையும் சமநிலைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் அவற்றின் படுகடனைத் திட்டமிடுவதற்கும் முகாமைசெய்வதற்கும் பயன்படுத்தப்படும் அடிப்படையாகும். நிலைபெறத்தக்க படுகடன் மட்டங்களைப் பேணுவதற்கும், உள்நாட்டுப் படுகடன் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையை முகாமை செய்வதற்கும் இது நாடுகளுக்கு உதவும். இதற்கமைவாக, படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தில் நிதியிடல் உள்ளமைப்பினை அடிப்படையாகக் கொண்டு, குறித்த நிதி ஆண்டிற்கு நிதியிடுவதற்கு ஒவ்வொரு கடன்பெறுகைச் சாதனத்தையும் அதன் பங்களிப்பினையும் குறித்துரைக்கும் வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் உருவாக்கப்படும். இது

குறிப்பிட்ட நிதி ஆண்டிற்குப் பொதுப் படுகடன் வழங்கல் நாட்காட்டியை வடிவமைப்பதற்கான அடித்தளமாகும்.

படுகடனைத் திரட்டும் பிரதான வகைகளில் ஏலங்கள், கூட்டுக்கடன், தனிப்பட்ட பிணைய விற்பனைகள் மற்றும் மேலதிக முறி விற்பனை மீண்டும் வழங்கக்கூடிய விற்பனைகள் (TAP sales) போன்றன உள்ளடங்குகின்றன. இத்தகைய ஒவ்வொரு முறையின் சுருக்கமான விபரணமும் கீழே தரப்பட்டுள்ளது.

***ஏலங்கள்:*** குறித்த நறுக்குடனும் முதிர்ச்சிக் கட்டமைப்புடன் கூடிய முறியானது ஏலமொன்றின் மூலம் வழங்கப்படுகின்றது. இங்கு முதலீட்டாளர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு (சில மணி நேரங்கள்) விலைகுறிப்பீடுகளை மேற்கொண்டு அவர்கள் செலுத்தும் விலை (அல்லது அவர்களுக்குத் தேவையான விளைவு) மற்றும் இவ்விலையில்/இவ்விளைவில் அவர்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் தொகைகள் குறித்துக்காட்டுகின்றனர். கூட்டுக்கடன் அதாவது பல விலை மற்றும் ஒரேசீரான (தனியொரு) விலை ஏலங்கள் என இரு ஏலங்கள் காணப்படுகின்றன.

***கூட்டுக்கடன்:*** முறி கூட்டுக்கடன் என்பது நிதியியல் நிறுவனங்கள் குழுவொன்று இணைந்து நிதியியல் ஆதரவிற்கு உத்தரவாதமளிப்பதற்கும் புதிய முறி வழங்குவதற்கும், ஏற்று, கூட்டிணைவிற்கும் செயன்முறையைக் குறிக்கின்றது. இந்நிகழ்வில், ஒருங்கிணைப்புச் செயன்முறையை ஒழுங்கமைப்பதற்கு முன்னணி பொறுப்பு முகாமையாளரை (முகாமையாளர்களை) அரசாங்கம் (வழங்குநர்) நியமிப்பதுடன் முன்னணி பொறுப்பு முகாமையாளர் (முகாமையாளர்கள்) முறி வழங்கலைக் கட்டமைத்தல், சந்தை நிலைமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் நியதிகள் தொடர்பிலான பின்னூட்டலை வழங்குதல் (நறுக்கு வீதம், முதிர்ச்சி, மற்றும் உடன்படிக்கைகள்) போன்றவற்றுக்கு உதவுவார். அரசாங்கம் கடன்பெறுவதற்காக ஏனைய வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கூட்டிணைதலை இம்முகாமையாளர்கள் ஒருங்கிணைக்கின்றனர்.

***தனிப்பட்ட பிணைய விற்பனைகள்:*** தெரிவுசெய்யப்பட்ட சிறிய முதலீட்டாளர் குழு, ஓய்வூதிய நிதியங்கள் போன்ற பெரும்பாலும் வங்கியல்லா நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் போன்றவற்றுடன் படுகடன் சாதனங்களின் தனிப்பட்ட விற்பனையை இது ஈடுபடுத்துகின்றது. இதற்கமைய, முதலீட்டாளர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையில், அதாவது பேரம்பேசப்பட்ட நியதிகளில் நெகிழ்ச்சித்தன்மையுடன் தனிப்பட்ட தேவைக்கேற்றவாறு முதலீட்டாளருடன் நேரடியாக ஒப்பந்தங்கள் இடம்பெறுகின்றன. இம்முறை கட்டமைப்பதற்கு இலகுவாகவும் விரைவாகவும் காணப்படுகின்றது.

***மேலதிக முறி விற்பனைகள்*** *(TAP Sales):* தனியொரு ஏலத்தில் அல்லது புதிய பிணை விற்பனை ஊடாக கடன்பெறுகையில் ஈடுபடாது, குறிப்பிட்ட காலத்தினுள் நிதியங்களைக் கடன்பெறுதல் நேரடி விற்பனையாக இனங்காணப்படுகின்றது. முறி வழங்குநர், நிலையான விலையில் குறிப்பிட்ட காலத்திற்கு முறி கிடைக்கப்பெறுவதை அறிவிக்கத்தக்க பொதுவாக மத்திய வங்கியின் வாயிலாக இது மேற்கொள்ளப்படுகின்றது.

3.2 படுகடனைத் திரட்டுவதற்கான முறையினை, அதாவது வழங்கல் நுட்பத்தைத் தெரிவுசெய்கின்றபோது, அரசாங்கத்தின் நிதியிடல் தேவைகளின் அவசரத்தன்மை மற்றும் அளவு, சந்தை மற்றும் குறிப்பிட்ட சந்தை வழங்கலின் அபிவிருத்தி மட்டம், அத்துடன் வழங்கலின் நோக்கம் போன்ற காரணிகளை அரசாங்கங்கள் பொதுவாக கருத்திற்கொள்கின்றன.

## 4 முறிகளில் முதலீடுசெய்வதிலுள்ள இடர்நேர்வுகள்

மேலே கலந்துரையாடப்பட்டதற்கமைய, பிணையங்களின் சாதனங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவுடன், முதலீட்டாளர்கள் முதலீட்டுத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் அத்தகைய சாதனங்களின் உட்பொதிந்த இடர்நேர்வுகளைக் கருத்திற்கொள்கின்றனர். இதற்கமைய, நிலையான வருமானப் பிணையங்களின் முதலீட்டாளர் எதிர்கொள்ளும் இடர்நேர்வுகளில் பிரதானமாக, கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, விளைவு வளையி இடர்நேர்வு, மீள்முதலீட்டு இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு ஆகியவை உள்ளடங்குகின்றன. அவற்றின் சுருக்கமான விபரணம் கீழே தரப்பட்டுள்ளது.

### கொடுகடன் இடர்நேர்வு

முறியொன்றின் கொடுகடன் இடர்நேர்வானது வழங்குநர் அவரின் கடப்பாடு மீதான தவணைத்தவறும் இடர்நேர்வினை உள்ளடக்குகின்றது (தவணைத்தவறும் இடர்நேர்வு). ஒன்றில் தவணைத்தவறும் இடர்நேர்வில் உணரப்பட்ட அதிகரிப்பின் காரணமாக உயர்ந்தளவான விளைவு வீதமொன்றினை சந்தைகளுக்கு தேவைப்படுகின்றது அல்லது தரமிடல் முகவராண்மைகளின் முறியின்/வழங்குநரின் தரமிடலைக் குறைக்கும் என்பதால் முறியின் பெறுமதி/விலை வீழ்ச்சியடையும் (தரம் குறைத்தல்) இடர்நேர்வாகும்.

### சந்தை (வட்டி வீத) இடர்நேர்வு:

அதிகரிக்கின்ற விளைவு வீதத்தின் காரணமாக முறியொன்றின் விலையானது குறைவடையும் அபாயம்

காணப்படுகின்றது. இது முறி முதிர்ச்சியடைவதற்கு முன்னர் அவற்றினை விற்பனை செய்ய வேண்டியுள்ள முதலீட்டாளரொருவருக்கு “மூலதன இழப்பை” ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை அதிகரிக்கும். நீண்டகாலப்பகுதி விலை அசைவுகளுக்கான பெரும்பாலான இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையை குறித்துக்காட்டும் என்பதை உறுதிசெய்வதற்கு வட்டி வீத அளவீட்டு உணர்திறனான, கால அளவு[1] மற்றும் குவிவுத்தன்மை[2] போன்றன முக்கியமானவையாகும்.

***விளைவு வளையி இடர்நேர்வு:*** இது விளைவு வளையின் வடிவத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முறி விலையின் வீழ்ச்சியடையும் இடர்நேர்வு (வளையின் சமாந்திரமற்ற நகர்வு). உதாரணமாக, குறுகிய கால வீதங்கள் நீண்ட கால வீதங்களை விட வேகமாக உயர்வடைதல். விளைவு வளையின் வடிவம் மாற்றமடைகின்ற போது, சொத்துப்பட்டியலிலுள்ள ஒவ்வொரு முறி வழங்கல் விலையும் அவற்றின் முதிர்ச்சியைச் சார்ந்து வேறுபட்ட அளவுகளில் மாற்றமடையும்.

***மீள்முதலீட்டு இடர்நேர்வு:*** இது மீள்முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வருவாய்களின் மாறுபாடாகும் (குறிப்பாக நறுக்கு). இடைக்கால காசுப் பாய்ச்சலை மீள முதலிடுவதற்கான வட்டி வீதம் (வட்டி மீதான வட்டி) அந்நேரத்தில் நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தைப் பொறுத்திருக்கும். மீள்முதலீட்டு இடர்நேர்வானது நீண்ட காலத்திலான வைத்திருக்கும் காலத்தையும் உயர்ந்தளவான நறுக்கு முறிகளையும் விட பெரியதாகும். கீழே எடுத்துரைக்கப்பட்டவாறு, வட்டி வீத இடர்நேர்வும் மீள்முதலீட்டு இடர்நேர்வும் எதிர் திசைகளில் செயற்படுகின்றன.

| | |
|---|---|
| வட்டி வீத இடர்நேர்வு | வட்டி வீதம் உயர்வடையும் என்பதுடன் முறி விலை குறைவடையும் |
| மீள் முதலீட்டு இடர்நேர்வு | வட்டி வீதம் குறைவடையும் என்பதுடன் நறுக்குகள் மீதான ஆதாயம் குறைவாக இருக்கும். |

1. முறியின் மொத்த காசுப் பாய்ச்சல்களின் முதலீட்டாளரொருவர் அதன் விலையை மீளச்செலுத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை, ஆண்டுகளில் கால அளவு அடையாளம் காட்டுகிறது. வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு முறி அல்லது நிலையான வருமானச் சொத்துப்பட்டியல் விலை எவ்வளவு உணர்திறன் கொண்டது என்பதைக் கணக்கிடுவதற்கு இதைப் பயன்படுத்தலாம்.
2. குவிவுத்தன்மை என்பது முறி விலைகள் மற்றும் வட்டி வீதங்களுக்கிடையிலான தொடர்பினைக் குறிக்கின்ற வளையி ஆகும். இது வட்டி வீதங்கள் மாறுவதற்கு ஏற்ப முறியின் கால அளவு மாறும் வீதத்தைக் குறிக்கும்.

***திரவத்தன்மை இடர்நேர்வு:*** முதலீட்டாளருரொருவர் முதலீட்டுச் சாதனத்தை விற்பனை செய்வதற்கு இயலச்செய்யும் இலகுவான தன்மையைக் குறிக்கின்றது. வேறுவார்த்தையில் கூறுகையில், திரவத்தன்மை இடர்நேர்வு என்பது முறிக்கான சில வாங்குநர்கள் மற்றும் விற்பனையாளர்களைக் கொண்ட ஒடுங்கிய சந்தையின் காரணமாக முதலீட்டாளரின் சொத்துப்பட்டியலினை விரைவாக விற்பனை செய்வதற்கு இயலாதிருக்கும் இடர்நேர்வு எனக் குறிப்பிடப்படுகின்றது. திரவத்தன்மைச் சந்தை என்பது பாரியளவிலான கொடுக்கல்வாங்கல்களுக்கு பொருண்மியரீதியில் மாற்றமடையாது காணப்படுகின்ற சிறிய விலைக்குறிப்பீட்டு கேள்விகளின் பரவல் மூலம் வகைப்படுத்தப்படுகின்றது. ஒட்டுமொத்த சந்தையின் நோக்கில், சிறந்த விலைக் குறிப்பீட்டு விலைக்கும் (முதலீட்டாளரொருவர் கொடுப்பனவுசெய்வதற்குத் தீர்மானித்துள்ள உயர்ந்தளவான விலை) சிறந்த கேள்வி விலைக்கும் (மிகக்குறைந்த கொடைமுனைவு விலை மற்றும் முறி உடைமையாளர் ஏற்றுக்கொள்வதற்கு விரும்பும் விலை) இடையிலான வேறுபாடாக விலைக்குறிப்பீட்டு கேள்வி பரவல் விளங்குகின்றது.

## 5 நாட்டிற்கான படுகடன் முகாமைத்துவம்

5.1 அரசாங்கத்தினால் வழங்கப்படும் படுகடன் சாதனங்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்வதற்கான முதலீட்டாளர்களின் முன்னெடுப்புகளுக்கு இணையாக, அரசாங்கங்கள் தமது ஒட்டுமொத்த நாட்டிற்கான படுகடன் மட்டங்கள் மற்றும் அத்தகைய படுகடன் மட்டங்கள் நிலைபெறத்தக்க வழியில் பேணப்படும் விதம் குறித்துக் கவனம்செலுத்துகின்றன. அரசாங்கத்தின் நோக்கிலிருந்து, நாட்டிற்கான படுகடன் உறுதியளிக்கப்பட்டுள்ள ஆனால் இன்னும் வரையப்படாத கடன்கள், அல்லது பிணையுறுதியாகப் பயன்படுத்தப்படுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள அரச பிணையங்கள் (உதாரணமாக, காசு முகாமைத்துவ நோக்கங்களுக்காக) நீங்கலாக, வழங்கப்பட்டுள்ள அனைத்து பிணையங்களையும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கடன்களையும் உள்ளடக்குகின்றது. எனவே, நாட்டிற்கான படுகடனுடன் தொடர்புடைய செலவுகளையும் இடர்நேர்வுகளையும் முகாமைசெய்வதற்கு குறித்த அரசாங்கத்திற்கான படுகடன் முகாமையாளர்களின் பொறுப்பாக இது விளங்குகின்றது. இதற்கமைய, எதிர்பாரா பொறுப்புக்கள் உள்ளடங்கலாக, அனைத்து மூலங்களிலிருந்தான சாத்தியமான இடர்நேர்வுகள் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரிக்கச்செய்வது முக்கியமானதாகும்.

### 5.2 செலவு குறிகாட்டிகளை இனங்காணுதல்

நாட்டிற்கான படுகடன் செலவினை முகாமைசெய்யும் பொருட்டு, படுகடன் செலவுக் குறிகாட்டிகளை இனங்காண்பது அவசியமாகும். இதன் சுருக்கம் கீழே வரைபடம் 4இல் தரப்பட்டுள்ளது.


**வரைபடம் 4: செலவுக் குறிகாட்டிகள்**

| கடன்பாட்டுச் செலவு: கடன்கள் | கடன்பாட்டுச் செலவு: பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்) |
|---|---|
| கடனின் ஒட்டுமொத்த ஆயுள் காலத்திற்குமான வட்டி வீதம் | சந்தை பின்வரும் காரணிகளால் நிர்ணயிக்கப்பட்டு செல்வாக்குசெலுத்தப்படுகின்றது:<br>• உள்நாட்டுப் பேரண்ட நிலைமைகள்<br>• சந்தை நிலைமைகள்<br>• உலகளாவிய காரணிகள்<br>• வழங்குநரின் நடத்தை (உ-ம். ஏலத்திற்கான நாட்காட்டியை ஊகிக்கும்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை, படுகடன் மட்டங்கள் மற்றும் படுகடன் உள்ளமைப்பு) |
| மறைமுகமான செலவுகள் (உ-ம்., தேவையான பிணையுறுதி, வட்டி வீதத்தை அதிகரித்தல், முதன்மைக் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்தல் போன்றன உள்ளடங்கும் உடன்படிக்கைகள்) | |
| மாற்றுவழி மூலங்களுடன் தொடர்புடைய மதிப்பீடு (உ-ம். மூலதனச் சந்தைகளினூடாக படுகடனைத் திரட்டுதல்) | |
| சாத்தியமாயின், இணை நாடுகளுடனான விலை ஒப்பீடு | |
| பல்புடை மற்றும் பெரும்பாலான இருபுடைய மூலங்களிலிருந்தான கடன்களின் நியதிகள் ஒரே மாதிரியாக காணப்படுகின்றன (மேலதிக கொள்கை நிபந்தனைகளுக்கு புறம்பாக) | |

### 5.3 நாட்டிற்கான படுகடன் இடர்நேர்வுகளும் முகாமைத்துவக் கருவிகளும்

நாட்டிற்கான படுகடனுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளையும் செலவுகளையும் இனங்கண்டவுடன், நிலைபெறத்தக்க படுகடன் கலாசாரத்தைப் பேணிவளர்ப்பதற்கு அரசாங்கம் அதனை முகாமைசெய்வது அவசியமாகும். இடர்நேர்வானது வரவுசெலவுத்திட்டத்திலும் அரசாங்கத்தின் ஐந்தொகையிலும் அதன் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றிலிருந்து விலகுவதற்கான செலவிற்கான சாத்தியப்பாட்டுடன் இணைந்ததாகும். இடர்நேர்வு (அதிர்வு) சூழ்நிலையின் கீழ் காணப்படும் செலவிற்கு எதிரான அடிப்படை செலவிற்கிடையிலான வேறுபாடு அளவீடாகக் கருதப்படுகின்றது. எனவே, வேறுபாடானது முழுமையான உயர்ந்தபட்சம், நியம விலகல் போன்றவாக அளவிடப்படலாம். இது கீழே வரைபடம் 5இல் காட்டப்பட்டுள்ளது.

**வரைபடம் 5: இடர்நேர்வு அளவீடு**




சந்தை வீதங்களின் எதிர்பார்க்கப்படாத நகர்வினால் உருவாகும் படுகடன் தீர்ப்பனவிலுள்ள அதிகரிப்பு அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தைப் பாதிக்கலாம். பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு இதைஅளவிடலாம்.

$$Risk_t^{(j)} = f(Exposure_t^{(j)}, Risk\ Factor_t^{(j)})$$

இடர்நேர்வுக்குள்ளாகும் *தன்மை:* படுகடன் முகாமைத்துவத்திற்கு உள்ளக வளர்ச்சி (இறைக் கொள்கையினால் தூண்டப்பட்டது)

இடர்நேர்வுக் *காரணி:* மீள்நிதியிடல் இடர்நேர்வு தவிர புறவளர்ச்சி.

அத்தகைய இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்குப் பின்பற்றப்படவேண்டிய பொருத்தமான வழிமுறைகளை இனங்காணும் பொருட்டு, நாட்டிற்குக் குறிப்பாக மீள்நிதியிடலையும் திரவத்தன்மை இடர்நேர்வுகளையும் உறுதிசெய்வது அவசியமாகும். உயர்ந்தளவான பணவீக்க சாத்தியப்பாடு மற்றும் உயர்வான தவணைதவறும் நிகழ்தகவு என்பவற்றில், எதிர்பாராத இறைத் தேவைகள்

படுகடனில் சாத்தியமாக பாரியளவு அதிகரிப்பினை வெளிப்படுத்தும் என்பதுடன் படுகடன் சுமையையும் அதிகரிக்கச்செய்யும். முதலீட்டாளர்கள், குறைவடைந்த நம்பிக்கையை உணரலாம். படுகடன் மீது உயர்ந்தளவான விளைவினைக் கோரலாம், குறுங்கால படுகடனில் மாத்திரம் முதலீடு செய்யலாம், அல்லது மீள்முதலீடு செய்யாமலே விடலாம் (நீடிக்காமை), அல்லது முதலீடுகளை விற்பனைசெய்தல் (பிணையங்களை விற்பனை செய்தல்). மேலும், குறைவாக அபிவிருத்தியடைந்த சந்தைகளில், பன்முகப்படுத்தப்படாத முதலீட்டாளர் தளம் மற்றும் நிலையற்ற கேள்வியும் மீள்நிதியிடலில் நிச்சயமற்றதன்மைகளை அதிகரிக்கச்செய்யலாம்.

அரசியல்சார்ந்த இடர்நேர்வு, அதாவது அதிகளவில் பிளவுப்பட்ட அரசியல் சூழ்நிலை, மீள்நிதியிடலுக்கான அரசாங்கத்தின் சட்ட இயலாற்றலையும் பாதிக்கலாம். இதற்கு மேலதிகமாக, எதிர்பார்க்கப்படாத காசுப் பாய்ச்சல் கடப்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றுதல் அல்லது குறுகிய காலத்தில் பணத்தைத் திரட்டுவதிலுள்ள சிரமம் என்பன கருத்திற்கொள்ளப்பட வேண்டிய காரணிகளாகும். போதியளவு காசுத் தாங்கிருப்புக்களைப் பேணுவதன் மூலமும், நீண்டகாலத்திற்கு திகதியிடப்பட்ட முறிகளை வழங்குவதன் மூலம் முதிர்ச்சி தோற்றப்பாட்டினை நீடித்தல், பொறுப்புவாய்ந்த முகாமைத்துவத் தொழிற்பாடுகளைச் செயற்படுத்துவதன் மூலம் இது முகாமைசெய்யப்படலாம்.

மேலும், வட்டி வீதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களிலிருந்து படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு சார்ந்த இடர்நேர்வு அதிகரிக்கின்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயப் படுகடன் இரண்டிற்கும், படுகடன் (நிலையான மற்றும் மாறுகின்ற வீதம்) மீள்நிதியளிப்பு செய்யப்படும்போது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் முக்கியமாக புதிய வழங்கல்கள் மீதான படுகடன் தீர்ப்பனவுச் செலவுகளைப் பாதிக்கலாம். குறிப்பாக, மாறுகின்ற வீதங்களில் திரட்டப்பட்ட படுகடனில், தொடர்பு வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு மற்றும் நிர்ணயிக்கப்படுகின்றபோது வட்டிக் கொடுப்பனவுகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, குறுகிய கால மற்றும் மாறுகின்ற வீதம் ஆகிய இரண்டும் பொதுவாக, நீண்டகால நிலையான வீதப் படுகடனை விடவும் இடர்நேர்வுமிக்கதாகக் கருதப்படுகின்றது. மேலே குறிப்பிட்டவற்றைக் கருத்திற்கொண்டு, வட்டி வீத இடர்நேர்வை முகாமைசெய்வதற்கு குறுகிய காலத்திற்குத் திகதியிடப்பட்ட சாதனங்களைக் குறைத்து, பெறுதிகள் போன்ற (காப்புச் சாதனங்கள், பரஸ்பர பரிமாற்றல்கள், தெரிவுகள், சாத்தியமான இணைத்தரப்பினரின் கொடுகடன் இடர்நேர்வு, மற்றும் மேலதிகச் செலவு போன்றவற்றுடன் கூடிய அனைத்து வட்டி வீதத்திற்கும் உட்பட்ட முன்னோக்குதல்கள்) மாறுகின்ற வீத சாதனங்களைத் தவிர்ப்பது அவசியமாகும் அத்துடன் தீவிர பொறுப்பு முகாமைத்துவ விடயத்தில், சாத்தியமானவிடத்து இயற்கைக் காப்பினைப் பயன்படுத்துவதற்கு முயற்சிப்பது அவசியமாகும்.

உள்நாட்டு நாணயத்தில் ஏற்படும் தேய்மானத்தின் காரணமாக படுகடன் தீர்ப்பனவுச் செலவின் அதிகரிக்கின்ற இடர்நேர்வுச் செலவாணி வீத இடர்நேர்வாக இனங்காணப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட படுகடனைப் பொறுத்த வரையில், வெளிநாட்டு நாணயப் படுகடன் மீள்நிதியிடப்படுகின்ற போது, பொதுவாக, புதிய வழங்கல்கள் மீது, உள்நாட்டு நாணயத்தின் தேய்மானம் படுகடன் தீர்ப்பனவு செலவுகளைப் பாதித்து, (நிலையான மற்றும் மாறுகின்ற வீதம்) (நிலையானதும் மாறியிலான வீதம்) ஆகிய இரண்டிற்கும் உள்நாட்டு நாணயம் தேய்மானமடைகின்றதனாலும் தேய்மானமடைகின்ற போதும் வட்டிக் கொடுப்பனவுகள் பாதிக்கப்படுகின்றன. பன்னாட்டு ஒதுக்குகள் படுகடன் தீர்ப்பனவிற்காக பயன்படுத்தப்படுமாயின், சாத்தியமான சென்மதி நிலுவைத் தாக்கங்களை இது அதிகரிக்கச்செய்யும். எனவே, உள்நாட்டுப் படுகடனை விடவும் வெளிநாட்டு நாணயப் படுகடன் மிகவும் இடர்நேர்வுமிக்கதாகக் கருதப்பட வேண்டும். எனினும், சலுகை நியதிகள் மீதான பல்தரப்பு கடன்களைப் பொறுத்த வரையில், செலாவணி வீத இடர்நேர்விற்குக் குறைந்தளவு செலவு ஈடுசெய்யலாம் என்பதுடன் உள்நாட்டுச் சந்தையின் அளவினைப் பொறுத்து, தனியார் துறைக்குக் கடன் வழங்குவதைக் குறைக்கலாம். வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட படுகடனைக் குறைப்பதன் மூலமும் (சலுகை ரீதியிலான கடன்களுக்கு மட்டுப்படுத்தல்) காப்பு சாதனங்கள், பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்தங்கள், தெரிவுகள், செலாவணி வீதத்திற்கும் உட்பட்ட முன்னோக்குதல்கள், (அனைத்து சாத்தியமான இணைத்தரப்பினரின் கொடுகடன் இடர்நேர்வு, மற்றும் மேலதிக செலவுடன்) செயற்பாட்டிலுள்ள பொறுப்பு முகாமைத்துவ விடயத்தில், சாத்தியமானவிடத்து இயற்கை இடர்காப்பினைப் பயன்படுத்துதல் போன்ற பெறுதிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் செலாவணி வீத இடர்நேர்வு குறைக்கப்படலாம்.

இதற்கமைய, குறிப்பிட்ட அரசாங்கத்தினால் படுகடன் முகாமைத்துவ உபாயத்தினை தெரிவுசெய்கின்றபோது, அது தீர்மான (கொள்கை) வகுப்பாளர்களின் செலவு இடர்நேர்வு

குறித்த ஆர்வத்திற்கமைவாக இருந்து, ஏற்கனவேயுள்ள படுகடன் சொத்துப்பட்டியலின் செலவு இடர்நேர்வின் பண்புக்கூறுகளை விபரித்தலானது எதிர்காலத்தில் விரும்பத்தக்க படுகடன் சொத்துப்பட்டியலினையும் செலவு இடர்நேர்வு விட்டுக்கொடுப்பு தொடர்புடைய நாட்டிற்கான முன்னுரிமைகளையும் வெளிப்படுத்துவதற்கு உதவும்.

### 5.4 முதிர்ச்சிக்கான விளைவினைக் கருவியொன்றாகப் பயன்படுத்தல்

முதிர்ச்சிக்கான விளைவு என்பது வழங்கப்பட்டுள்ள முதிர்ச்சி மற்றும் வட்டி வீதத்துடன் குறிப்பிட்ட முறியை வைத்திருப்பது மீதான வருமானம் பற்றிய சிறந்த அளவொன்றாகும். இதைக் கருவியொன்றாகவும் பயன்படுத்தலாம். அனைத்து காசுப் பாய்ச்சல்கள் தொகையைப் பூச்சியமாக்குகின்ற விலையிடல் வீதத்தை அறிந்துகொள்வதன் மூலம் இது அடையப்பெறுவதுடன் இக்கழிவிடல் வீதம் முதிர்ச்சிக்கான விளைவு ஆகும். பின்வருமாறு இது கணிதரீதியாக வெளிப்படுத்தப்படலாம்:

- Out flow ( market price) at time (t=0) = Σ discounted cash in flows
- Market Price = $\frac{Cash\ flow_1}{(1+YTM)^1} + \frac{Cash\ flow_2}{(1+YTM)^2} + \cdots + \frac{Cash\ flow_n}{(1+YTM)^n}$

பணத்திற்கான காலப் பெறுமதி மற்றும் மூலதன ஈட்டலினையும் இது கருத்திற்கொள்கின்றதனால் ஏனைய விளைவுகளின் வகைகளையும் விட (நடைமுறை அல்லது சாதாரணம்) சாதனத்தின் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதில் முதிர்ச்சிக்கான விளைவின் கணிப்பீடு சிறந்ததாகும். எனினும், விளைவுகளின் ஏனைய வகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது விலையிடல் கணிப்பீடுகளில் உதவுவதற்கு இது போதுமானதாக இல்லை. எனவே, பூச்சிய நறுக்கு விளைவென அழைக்கின்ற மற்றுமொரு விளைவு வகையினைக் கருத்திற்கொள்வதற்கு ஆலோசிக்கப்படுகின்றது.


***பூச்சிய நறுக்கு விளைவு:*** ஆண்டுகளுக்கு இடையில் வட்டி கொடுப்பனவு காணப்படாமையினாலும் அத்தகைய சாதனங்கள் பொதுவாக சந்தைகளில் காணப்படாமையினாலும், தனியொரு எதிர்கால பெறுமதியிலிருந்து அதன் தற்போதைய பெறுமதிக்கான தொடர்பினை இது அளவிடுகின்றது. எனினும், நறுக்கு (வட்டி) கொண்ட முறிகள் மற்றும் பூச்சிய நறுக்கு விளைவுகளைப் பயன்படுத்திக் கட்டமைப்பது சாத்தியமாகும் என்பதுடன் அவற்றின் கழிவிடல் காரணிகள் ஏனைய பல்வேறு விளைவுகளையும் அதேபோன்ற விலையிடல் முறிகளையும் பெறுவிப்பது பயன்மிக்கதாகக் காணப்படுகின்றது. பூச்சிய நறுக்கு விளைவானது நறுக்கு செலுத்தும் முறிகளைப் பயன்படுத்தி உருவாக்கபட்டுள்ளதுடன் முதிர்ச்சியின் மூலம் முதிர்ச்சி கட்டமைக்கப்படுகின்றது. விளைவின் மூலம் விளைவை கணக்கிடும் முறை (குறைந்த முதிர்ச்சியிலிருந்து உயர்ந்தளவான முதிர்ச்சிக்கு) பூட்ஸ்ரேப்பிங் என அழைக்கப்படுகின்றதுடன் வேறுப்பட்ட முதிர்ச்சிகளுக்கான விளைவுகள் சுயாதீனமாக அடையப்பெறப்படும் முதிர்ச்சிக்கான விளைவினைப் போலன்றி வேறுபட்ட முதிர்ச்சிகளின் விளைவுகளுக்கிடையில் தொடர்பு காணப்படுகின்றது. மேலும், விலையிடல் மற்றும் சம விளைவுகளைக் கணக்கிடுவதற்குப் பூச்சிய நறுக்கு கழிவிடல் காரணிகள் பயனுள்ளதாக இருப்பதுடன் முன்னோக்கிய விளைவுகளுக்குப் பூச்சிய நறுக்கு விளைவுகள் பயனுள்ளதாக இருக்கும்.

***சம விளைவு:*** இது சந்தையைச் பரிசோதிப்பதற்கும், கடன் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் இரண்டும் அதே மீட்புப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போது அவற்றினை ஒப்பீடுசெய்வதற்கும் (முகப்பு அல்லது சமப் பெறுமதி) பரஸ்பர பரிமாற்றல் வீதங்களை ஒப்பிடுவதற்குப் பயன்படுகின்றது. முகப்பு விளைவு பின்வருமாறு இது கணிதரீதியாக வெளிப்படுத்தப்படலாம்.

$$\frac{(1-Zero-Coupon\ Discount\ Factor_n)}{\sum_{t=1}^{n} Zero\ Coupon\ Discount\ factors}$$

***முன்னோக்கிய விளைவு:*** முன்னோக்கிய வட்டி வீதம் குறிக்கப்படலாம் என்பதுடன் $f(t,\tau,T)$ பின்வரும் பொதுவான சூத்திரத்தைப் பயன்படுத்தி பெறுவிக்கப்படலாம்.

$$f(t,\tau,T)=\left(\frac{\left(1+z(t,T)\right)^{T-t}}{\left(1+z(t,\tau)\right)^{\tau-t}}\right)^{\frac{1}{T-\tau}}-1$$





Where:
- Z(t,T) = Zero coupon yield rates
- t = current time
- τ= starting point of the forward contract and
- T= maturity of the forward contract

விளைவு மற்றும் முதிர்ச்சிக்கிடையிலான தொடர்பினையும் அதன் பொது பிரயோகத்தினையும் காண்பிக்கின்ற விளைவு வளையி விளக்க வரைபடம் கீழே வரைபடம் 6இல் தரப்பட்டுள்ளது (ஒரே அல்லது ஒத்த இடர்நேர்வு தோற்றப்பாட்டுடன் நிலையான வருமானப் பிணையங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்).

முதிர்ச்சி (X -அச்சு) மற்றும் விளைவு (Y – அச்சு) இரண்டிற்கும் இடையிலான தொடர்பினை விளைவு வளையி காண்பிக்கின்றதுடன் முதிர்ச்சிக்கான விளைவு, பூச்சிய நறுக்கு, சம மற்றும் உள்ளடக்க முன்னோக்குதல்கள் போன்ற வகைகளில் இவை வரையலாம். விளைவுகள் அனைத்து முதிர்ச்சிகளுக்குக் கிடைக்கப்பெறாமையினால்,

**வரைபடம் 6: விளைவு வளையிகள்**




| வகை | விபரணம் |
| --- | --- |
| **முதிர்ச்சிக்கான விளைவு வீதம் (மீட்பு விளைவு வீதம்)** | • பொதுவாக சந்தைகளில் இனங்காணப்பட்டது<br>• பகுப்பாய்வு மற்றும் விலையிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டது<br>• மீள்முதலீட்டின் நிலையான வீதம் ஊகிக்கப்பட்டது |
| **சம விளைவு** | • சம விளைவு வீதம் – நறுக்கு வீதம்<br>• சமத்தில் வழங்கப்படும் புதிய முறியொன்றுக்கு தேவைப்படும் நறுக்கினை நிர்ணயிப்பதற்கான முதலாந்தரச் சந்தையில் பயன்படுத்தப்பட்டது<br>• மீள்செயன்முறையின் மூலம் உடன் விளைவு வளையிலிருந்து தீர்மானிக்கப்பட்டது |
| **பூச்சிய (உடன்)** | • திரவப் பூச்சிய நறுக்கு(உ-ம் தி-உண்டியல்கள்)<br>• நீண்டகாலத்திற்கு திகதியிடப்பட்ட சாதனங்களுக்கான வீதம்<br>• முதிர்ச்சி வளைவிற்கான விளைவிலிருந்து அல்லது சம விளைவு வளையிலிருந்து உருவாக்கப்படலாம்<br>• வட்டி வீதங்களின் காலக் கட்டமைப்பு<br>• மீள்முதலீட்டு இடர்நேர்வில்லை, எனவே ஒப்பீட்டுப் பெறுமதிப் பகுப்பாய்வில் பயன்படுத்துவதற்கு ஏற்றது<br>• பெறுவிக்கின்ற உட்கிடையான முன்னோக்கிய வீதங்களில் பயன்படுத்தப்பட்டது |
| **முன்னோக்கிய** | • பூச்சிய விளைவு என்பது முன்னோக்கிய வீதங்களின் கணித சராசரி பூச்சிய விளைவாகும்<br>• முதிர்ச்சிக் காலத்திற்கெதிரான முன்னோக்கிய வீதங்களின் வரைபடம் |

கணித ரீதியிலான அணுகுமுறைகள் தவறிய தரவுகளை அறிவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் “விளைவு வளையி பொருத்தி” வெளிப்படுத்தலும் பயன்படுத்தப்படுகின்றது. பின்வரும் கணிதரீதியிலான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன:

(i) இடைச்செருகல் (அவதானிக்கப்பட்ட விளைவுகளுக்கிடையில் தவறிய தரவுகளைக் கணிப்பிடுதல்), அத்துடன்

(ii) புறச்செருகல் (அதற்கு மேல் விளைவுகளைக் கண்டறிய முடியும் என்பதைக் காணலாம்)

விளைவு வளையி பொருத்தலுக்கான பொதுவான அணுகுமுறை (இலகுவானதாக இருந்தாலும்) பல்லுறுப்புக்கோவைச் செயற்பாடுகளைப் பயன்படுத்துவதாகும். நேரியல், இருபடி மற்றும் கனசதுரத்திற்கான சமன்பாடுகள் கீழே வரைபடம் 7இல் தரப்பட்டுள்ளது. பல்வேறு வகையான விளைவு வளையிகள் காணப்படுகின்றன.

பிரதானமாக:

(i) **சாதாரண விளைவு வளையி:** மெல்லிய மேல்நோக்கிய சாய்வானது

**வரைபடம் 7: சமன்பாடுகள்**

| வகை | பொதுவான மற்றும் அடுக்கைச் சமன்பாடுகள் |
| --- | --- |
| நேரியல் | $Y = \beta_0 + \beta_1 X + \epsilon$ |
| இருபடி | $Y = \beta_0 + \beta_1 X + \beta_2 X^2 + \epsilon$ |
| கனசதுரம் | $Y = \beta_0 + \beta_1 X + \beta_2 X^2 + \beta_3 X^3 + \epsilon$ |
| அடுக்கை | $Y = A - \beta * e^{-\frac{t}{T}}$ |


குறிப்பு: இடையீடு மற்றும் குணகமும் (ββίί) ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

(ii) **தலைகீழ் விளைவு வளையி:** தொடர்ச்சியான முன்னைய பொருளாதார மந்தநிலை, இல்லையெனில், குறுகிய கால நிகழ்வு (சில சந்தர்ப்பங்களில் கட்டமைப்புக் கேள்வி)

(iii) **ஒடுங்கிய விளைவு வளையி:** நடுத்தர கால உயர்வுடன் ஒத்த குறுகிய மற்றும் நீண்ட மட்டம் (கட்டமைப்புசார் கேள்வி)

(iv) **நேரான விளைவு வளையி:** இரு உச்சங்களினுள் (மட்டுப்படுத்தப்பட்ட சந்தை நடவடிக்கை)

சாதாரண வளையி தவிர, ஏனைய அனைத்து வளையிகளும் நிச்சயமின்மைகளையும் சந்தைத் திரிபுப்படுத்தல்களைக் காண்பிக்கின்றன.




சந்தைப் பிரிவு தெரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை (குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட) பகுப்பாய்வு செய்வதற்கும், குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு ஏதுவான காரணிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும், விளைவுகள் மற்றும் விலைகள் மீதான குறித்த நோக்கங்களை எதிர்வுகூறுவதற்கும் அத்துடன் ஏனைய வழங்குநர்களுக்கான (நிறுவன முறிகள்) அடித்தளத்தை அமைப்பதற்கும் (தொடர்பு) விளைவு வளையினைக் கிரமமாக (பூச்சிய நறுக்கினை அடிப்படையாகக் கொண்டு) உருவாக்குவது பயன்மிக்கதாக விளங்குகின்றது.

விளைவு வளையினைக் கருத்திற்கொள்கின்ற போது, முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட சந்தைத் தரவுகளை மதிப்பீடுசெய்வது அவசியமாகும் என்பதுடன் வட்டியைக் கொண்ட பிணையங்களைப் பூச்சிய நறுக்காக மாற்றுவதன் மூலமும், பூச்சிய நறுக்கு போதியளவு கிடைக்கவில்லையெனின், ஏனைய விளைவுகளைப் பயன்படுத்துவதன் மூலமும், வாராந்த அல்லது குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது விளைவு வளையினை உருவாக்குவதன் மூலமும் பூச்சிய நறுக்கினை மதிப்பிடுவது அசியமாகும்.

**6 கருவியொன்றாக பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகள்**

6.1 பொறுப்பு முகாமைத்துவமானது படுகடன் கட்டமைப்பினைப் பாதிப்பதால் தொடக்கத்தில், இடர்நேர்வு முகாமைத்துவக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்பயனாக படுகடன் இடர்நேர்வில் தாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. எனினும், தற்போதுள்ளதைப் போன்று, இப்பொறிமுறைச் செலவு மீதப்படுத்தல்கள், அல்லது முதலீட்டுப் பன்முகப்படுத்தல் போன்ற பலவகையான மேலதிகத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் ஐந்து பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு:

(i) **அரசாங்கப் படுகடன் சந்தைகளில் திரவத்தன்மையை அதிகரித்தல்:** இது அளவுக்குறியீட்டு முறிகளை உருவாக்குவதற்கு ஆதரவளித்து, முதிர்ச்சிக்கான குறுகிய கால எஞ்சிய காலத்திற்குப் படுகடனை முழுமையாக மீளச்செலுத்தி, விலை வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கு உதவும்.

(ii) **படுகடன் சொத்துப்பட்டியலில் இடர்நேர்வுகளை முகாமைசெய்தல்:** இது மீள்நிதியிடல் மற்றும் வட்டி வீத இடர்நேர்வையும் நாணய இடர்நேர்வையும் குறைப்பதற்கு உதவும்.

(iii) **புதிய நிதியிடல் செலவினைக் குறைத்தல்:** செலவு செயற்றிறன்வாய்ந்த சந்தை நிலைமைகள் மீது சார்ந்திருக்கும் என்பதுடன் படுகடனை மீள்கொள்வனவு செய்வது அல்லது பரிமாற்றிக்கொள்வது கொடுக்கல்வாங்கல் செலவை ஏற்படுத்தும் போதிலும், பழைய படுகடனை முழுவதுமாக மீளச்செலுத்துவதும் புதிய திரவ அளவுக்குறியீடுகளை வழங்குவதும் சந்தை விலையிடலைச் சார்ந்து செலவுப் பயனுறுதிமிக்கதாக இருக்கும். இரண்டிற்குமிடையிலான சமநிலை, நடைமுறைச் செலவு நன்மைகளைக் கொண்டிருப்பதைத் தீர்மானிக்கும்.

(iv) **சந்தைத் திரிபடைதலைச் சரிசெய்தல்**

(v) **அழுத்தம்மிக்க காலங்களின்போது சந்தையை நிலையுறுதிப்படுத்துதல்.**

6.2 இதற்கமைய, பொறுப்பு முகாமைத்துவம் என்பது படுகடன் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பைப் பாதிக்கும் சந்தை அடிப்படையிலான பொறிமுறைகளைப் பயன்படுத்தி ஏற்கனவேயுள்ள படுகடனை “மீள்தொகுப்பு” செயல்முறையே ஆகும். மீள்நிதியிடல் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கு இது உதவும். ஆயினும், மேலதிகமாக நிதியிடல் இல்லாதிருக்கும். பொறுப்பு முகாமைத்துவத்தின் முக்கிய பொறிமுறைகள் பின்வருமாறு:

(i) **முறியினை மீள்கொள்வனவு செய்தல்:** வழங்குநர்கள் நிலுவையிலுள்ள படுகடனை முதிர்ச்சியடைவதற்கு முன்பே காசுக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்கு எதிராக திரும்பப் பெறுவதற்கு உதவுதல்

(ii) **முறி பரிமாற்றங்கள்:** புதிய படுகடன் வழங்கலுடன் ஒன்றிணைந்து அதே பெறுபேற்றினை அடைதல்

மேற்கண்ட வழிமுறைகளின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் கீழே உள்ள படம் 8 இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

6.3 பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குச் சில முன்நிபந்தனைகள் காணப்படுகின்றன.

**வரைபடம் 8: பொறிமுறைகளின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்**

| | **மீள்கொள்வனவு செய்தல்** | **பரிமாற்றங்கள்** |
|---|---|---|
| **அனுகூலங்கள்** | • எளிமையானது<br>• பரந்தளவிலான முதலீட்டுத் தளம் | • மிகவும் சிக்கலானது<br>• முதலீட்டாளரின் தேவைகளுக்கான ஒத்திசைவு வேண்டப்படுகின்றது |
| **பிரதிகூலங்கள்** | • மீள்நிதியிடல் தேவையை உருவாக்குகின்றது | • பொதுவாக காசு நடுநிலை |

(i) வழங்குநர் பின்வரும் விடயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

- படுகடன் சொத்துப்பட்டியலில் விரும்பத்தக்க சீராக்கங்களை வரையறுப்பதற்கான படுகடன் முகாமைத்துவ உபாயம்
- கொடுக்கல்வாங்கல்களை செயற்படுத்துவதற்கான கட்டமைப்பொன்றை வழங்குவதற்கான வழங்கல் உபாயம், அத்துடன்
- கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு இயலுமாகவிருக்கும் இரண்டாந்தரச் சந்தையில் குறைந்தபட்சம் ஒரு மையச் செயற்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) செயற்றிறன்மிக்க சட்டக் கட்டமைப்பொன்றைக் கொண்டிருக்க வேண்டும்:

- படுகடன் முகாமைத்துவத்தை நிர்வகிக்கும் சட்டம் அதிகாரமளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கிடையில் முறியை மீள்கொள்வனவுசெய்தல் மற்றும் பரிமாற்றங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும், அத்துடன்
- படுகடன் முகாமையாளரின் தற்றுணிபின்படி, பொருத்தமான வழிகாட்டியாக அதைப் பயன்படுத்தக்கூடிய அனைத்துக் குறிக்கோள்களையும் இது குறிக்கின்றது.

(iii) நிறுவனரீதியிலான அமைப்பு அவசியமாகும். இங்கு சந்தையிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டிய பிணையங்கள் அவ்வாறு செய்வதற்கான பொருத்தமான பொறிமுறை மற்றும் விலையிடல் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கான அதிகாரம் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் கொண்டிருக்க வேண்டும்.

6.4 பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தோற்றம்பெறுகின்ற சில இடர்நேர்வுகளும் காணப்படுகின்றன. சந்தைச் சூழ்ச்சி/முரண்பாடு இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு (மீள்கொள்வனவு செய்தல் மற்றும் புதிய வழங்கல் ஆகியவற்றுக்கு

இடையே சந்தை விலைகளின் அசைவு மாறுபடுகின்ற விடத்து), வெற்றியளிக்காத தொழிற்பாட்டின் நற்பெயர் சார்ந்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மூலப் பங்குகளின் திரவத்தன்மையின்மை ஆகியவற்றைக் கருத்திில்கொள்வது முக்கியமானதாகும்.

6.5 எனினும், பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் பின்வரும் முறையில் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் தாக்கம் செலுத்தும்.

(i) பழைய முறியில் சேமிக்கப்பட்டு புதிய முறியில் செலுத்த வேண்டிய வருடாந்த நறுக்கின் கழிவுத் தொகை தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் மீதப்படுத்தலாகும். ஆகையினால், உயர்ந்தளவான நறுக்குடன் கூடிய பழைய முறியில் மீள்கொள்வனவு செய்வது வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை ஒடுங்கச்செய்யும் (அதே நேரத்தில் படுகடனின் தொகையை அதிகரிக்கும்).

(ii) பழைய முறிக்குக் கட்டுப்பணத்தைச் செலுத்தினால் மேலதிகச் செலவை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கும் (திரட்டல் ஒதுக்கீட்டில்), இங்கு புதிய முறிகள் மீதான கட்டுப்பணத்திற்கான/கழிவிடலுக்கான வழக்கமான நடைமுறை மூலதன ஈட்டலுக்கு/இழப்பிற்கு அரசாங்கத்திற்கு வழிவகுக்கும்.

## 7 முடிவுரை

நாடுகள் அவற்றின் பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கிரமமாகக் கடன் பெறுகின்றன. இலங்கை போன்ற ஒரு நாடு அதன் நிலைபேரற்ற தன்மையினால் ஏற்படும் பல இறை, நாணய மற்றும் நிதியியல் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு நிலைபெறத்தக்க முறையில் பொதுப் படுகடனை முகாமைசெய்வது மிக முக்கியமானதாகும். மேலே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ள முறைகள் மற்றும் படுகடன் மட்டங்கள் அத்துடன் தொடர்புடைய இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கணியம்சார் நுட்பங்கள் எந்தவொரு பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமும் கருத்திற்கொள்ள வேண்டிய சில பயனுள்ள நடைமுறைகளாக இருக்கும். (அ) நிறுவப்பட்ட கணியம்சார் நுட்பங்களைப் பயன்படுத்தி கொடுகடன், திரவத்தன்மை, சந்தை மற்றும் மீள்நிதியிடல் இடர்நேர்வுகள் போன்ற படுகடனைத் திரட்டுதல் மற்றும் தீர்ப்பனவுசெய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய இடர்நேர்வுக் காரணிகளைக் கணிப்பிடுவதற்கு உரிய பரிசீலனை கொள்ளுதல் மற்றும் (ஆ) படுகடன் மட்டங்களை நிலைபெறத்தக்க முறையில் சீராக்குவதற்குப் பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளைத் தீவிரமாகப் பிரயோகித்தல், நாட்டிற்கான படுகடனைத் திரட்டுவதிலும் அதனுடன் தொடர்புடையவற்றை முகாமைசெய்வதிலும் இன்றியமையாததாக விளங்குகின்றது. வழங்குநர் என்ற வகையில், அரசாங்கங்கள் தமது பிணையச் சந்தைகளை அபிவிருத்திச்செய்வதற்கும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் இவை உதவும்.

### உசாத்துணை

International Monetary Fund (IMF), “A Government Debt Issuance Strategy and Debt Management Framework”, Developing Government Bond Markets, IMF e-library, (2001).

Jonasson, T and Papaioannou M, A Primer on Managing Sovereign Debt-Portfolio Risks, IMF Working Paper (2018).




# இலங்கையில் நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு

எச். எம். சி. கே. ஹேரத்
மூத்த முகாமையாளர், பொதுப் படுகடன் திணைக்களம்

## 1 அறிமுகம்

இலங்கை மத்திய வங்கிக்கும்[1] (இதனகத்துப்பின்னர் "மத்திய வங்கி" எனக் குறிப்பிடப்படும்) அரசாங்கத்திற்கும் இடையிலான சிக்கலான மற்றும் சவால்மிக்கதாயினும் இன்றியமையாத உறவுமுறையானது மத்திய வங்கியின் தொடக்கத்திலிருந்தே அங்கீகரிக்கப்பட்டுக் காணப்பட்டது. பொதுவாக "எக்ஸ்ரர் அறிக்கை" என அழைக்கப்படுகின்ற "இலங்கைக்கான மத்திய வங்கியொன்றின் நிறுவுதல் குறித்த அறிக்கை" 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் சட்டமியற்றலிற்கான[2] அடிப்படையினையும் நியாயபூர்வத் தன்மையினையும் வழங்கியதுடன், இதன் கீழ் மத்திய வங்கியானது 1950 ஓகத்து 28 அன்று தாபிக்கப்பட்டது.

நாணயச் சபையின் அமைப்பு குறித்து எக்ஸ்ரர் அறிக்கையில் உள்ள விளக்கக் குறிப்பிலிருந்து பெறப்பட்ட பகுதியொன்று கீழே தரப்பட்டுள்ளது.[3]

> "...முன்மொழியப்பட்ட சட்டமானது நாணயச் சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்ச்சியான மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பொன்றினை அடையுமென்பது எதிர்பார்க்கப்படும் குறிக்கோளொன்றாகக் காணப்படுகின்றது. இவ்வொத்துழைப்பினை அடைவதற்கான முதன்மைச் சாதனமாக நிதியமைச்சிற்கான நிரந்தர செயலாளரொருவர் இருக்க வேண்டுமென்பதுடன், சபையில் இவ்வுறுப்புரிமையானது அவரது அமைச்சரின் கருத்துக்கள் சபையின் ஏனைய உறுப்பினர்களுக்குத் தெரிந்திருப்பதை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிச்சயப்படுத்தும். சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான இவ்வொத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பின் செயற்றிறனானது எந்தளவு கவனமாக அல்லது விரிவாக உருவாக்கப்பட்டிருப்பினும் எந்தவொரு சட்ட சூத்திரத்திலும் தங்கியிருக்காமல் குறிப்பிட்ட தருணங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்ற நபர்களிலேயே பெருமளவு தங்கியிருக்கும். சிக்கல்தன்மைவாய்ந்த மற்றும் சில நேரங்களில் மிகவும் நலிவானதாகக் காணப்படுகின்ற உறவுமுறையொன்று சட்டவாக்கமொன்றின் மூலம் முழுமையாக நிறுவப்பட முடியாது. இது ஏனைய நாடுகளைப் போன்று பல ஆண்டுகால அனுபவத்தின் விளைவாகவும் அரசியல் மரபுகளின் மெதுவான வளர்ச்சியின் விளைவாகவும் இருக்க வேண்டும்..."
>
> (எக்ஸ்ரர், 1949)

எனவே, நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பின் - எளிமையாக "நாணய - இறை ஒருங்கிணைப்பு" - முக்கியத்துவமானது 7 தசாப்தங்களுக்கு முன்னர் மத்திய வங்கியின் தொடக்கத்திலிருந்தே அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

மாறாக, நாணய-இறை ஒருங்கிணைப்பின் போதியளவிலான மட்டமொன்றினைக் கொண்டிருக்காமையின் விளைவுகள் எவையாயிருக்கும்? அத்தகைய சூழ்நிலையொன்றில், கொள்கை அதிகாரவரம்பொன்றில் பலவீனமான கொள்கை அணுகுமுறையொன்று ஏனைய கொள்கைப் பகுதியின் செயற்றிறனை எதிர்மறையாகப் பாதிக்க முடியும். எடுத்துக்காட்டாக, அதன் சொந்த சிறந்த நலன்களிற்கெதிராக, தளர்வானதோர் இறைக் கொள்கையானது மிகவும் கடுமையான நாணயக் கொள்கையொன்றினைத் தேவைப்படுத்தலாம். இருப்பினும் நாணயக் கொள்கை இறைச் சமநிலையின்மைகளை முழுமையாகத் தீர்ப்பதற்கான இயலுமையினைக்

---

1. ஆரம்பத்தில் சிலோன் மத்திய வங்கியென நிறுவப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து 1985இல் இலங்கை மத்திய வங்கி என மீள்பெயரிடப்பட்டது.
2. நாணய விதிச் சட்டமானது 1949 நவெம்பர் 25 அன்று சட்டமியற்றப்பட்டது.
3. எக்ஸ்ரர் அறிக்கையின் 8ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

கொண்டிராதிருக்கலாம். ஆகவே, நீண்ட காலத்தில், ஒட்டுமொத்த கொள்கைக் கட்டமைப்பில் தொடர்ச்சியாக நிலவுகின்ற முரண்பாடுகள் ஒவ்வொரு கொள்கையின் செயற்றிறனையும் குறைக்கக்கூடும். ஆதலால், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சி என்பவற்றிற்குக் குறிப்பாக, பொருளாதார அதிர்வுக் காலப்பகுதியில் நாணய மற்றும் இறை ஒருங்கிணைப்பானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது (Laurens & Piedra, 1998).

மத்திய வங்கியின் தொடக்கத்தில் நாணய-இறை ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தினை அடையாளங்கண்டு, நாணய விதிச் சட்டமானது நிதியமைச்சின் நிரந்தர செயலாளரை நாணயச் சபையின் உறுப்பினரொருவராக நியமிப்பதன் மூலம் அதனை வசதிப்படுத்தியது. நாணயச் சபையானது நாணய விதிச் சட்டத்திற்கமைய நாணயக் கொள்கையினை நிர்ணயிப்பதற்கு முதன்மையாகப் பொறுப்பாக்கப்பட்டிருந்தது. இருப்பினும், நாணய விதிச் சட்டமும் அரசாங்கத்தின் இறை முகவராகப் பொதுப் படுகடனை முகாமைத்துவம் செய்கின்ற பொறுப்பினை மத்திய வங்கிக்குக் குறித்தொதுக்கியது.[4] மத்திய வங்கிக்குக் குறித்தொதுக்கப்பட்ட இவ்விரட்டை வகிபாகமானது நாணய-இறை ஒருங்கிணைப்பிற்கான அவசியத்தினை மேலும் உயர்வடையச்செய்தது.

1949இல் அது இயற்றப்பட்டதிலிருந்து, நாணய விதிச் சட்டமானது பல்வேறு தடவைகள் திருத்தப்பட்டது. உதாரணமாக, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றினைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய வங்கியின் குறிக்கோள்கள் நெறிப்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சபையின் ஒப்புதலுடன், நிதியமைச்சரின் பரிந்துரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களுடன் சேர்த்து, நாணயச் சபையின் உள்ளமைப்பானது விரிவுபடுத்தப்பட்டது. அதேவேளை, சவால்மிக்க காலப்பகுதிகள் காணப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் சார்பாக அதன் படுகடன் முகாமைத்துவ முகவராண்மைத் தொழிற்பாட்டை மத்திய வங்கி தொடர்ந்து நிறைவேற்றியது.

இருப்பினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் மேலும் மோசமடைந்த நீண்டகால இறைச் சமநிலையின்மைகள் 2022 ஆண்டளவில் பொதுப் படுகடனை நிலைபேறற்ற மட்டங்களிற்கு இட்டுச்சென்றன. அதேவேளை, கணிசமானளவிலான வரிக் குறைப்புக்கள் மற்றும் மோசமடைந்துசெல்கின்ற இறைத் தோற்றப்பாடு என்பவற்றினால் முக்கியமாக உந்தப்பட்டு நாட்டிற்கான தரமிடல் குறைப்புக்கள் முதிர்ச்சியடைகின்ற வெளிநாட்டுப் படுகடனை நீடிக்கும் பொருட்டு பன்னாட்டு மூலதனச் சந்தைகளிற்கான அணுகலினை வரையறைக்குட்படுத்தியது. இறை ஆதிக்கத்தினை அனுமதித்த நாணய விதிச் சட்டத்தின் பலவீனங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், இறைக் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு பாரியளவிலான நாணய நிதியளிப்பினை அரசாங்கம் நாடியதுடன், அதன்மூலம் பணவீக்கத்தின் உயர்வொன்றிற்குப் பங்களித்தது. இதன் விளைவாக ஏற்பட்ட மந்தநிலை மற்றும் 2022இல் ஏற்பட்ட சமூக-பொருளாதார நெருக்கடியின் தொடக்கம் என்பன நீண்டகாலமாக நிலுவையிலுள்ள பொருளாதார சீர்திருத்தங்களின் அவசர நடைமுறைப்படுத்தலினைத் தூண்டின (பன்னாட்டு நாணய நிதியம், 2023).

2023 மாச்சில், இலங்கை அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியத்துடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடொன்றைக் கைச்சாத்திட்டது. இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றிற்கு ஆதரவளிக்கின்ற நோக்கில், இலங்கையின் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்றதன்மை என்பவற்றினை மீட்டெடுப்பது அதன் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகக் காணப்பட்டது. இக்குறிக்கோளுடன் இசைந்து செல்லும் விதத்திலும் பொருளாதாரத்தின் நிறுவன ரீதியிலான கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் பகுதியொன்றாகவும் மத்திய வங்கியின் தொழிற்பாட்டுச் சுயநிர்ணயத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு புதிய சட்டமொன்றின் தேவைப்பாடானது அங்கீகரிக்கப்பட்டது.

இப்புதிய சட்டமானது ஆளும் சபை அல்லது நாணயக் கொள்கைச் சபையில் அரசாங்கத்தின் எந்தவொரு விதத்திலுமான பிரதிநிதித்துவத்தினையும் அல்லது பங்கேற்பினையும் தடுக்குமெனவும் விதிவிலக்கான சூழ்நிலைகளினைத் தவிர, மத்திய வங்கி நாணய நிதியளிப்பினையும் திறைசேரிப் பிணையங்களின் முதலாந்தரச் சந்தைக் கொள்வனவுகளை மேற்கொள்வதனையும் தடை செய்யுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. 2023 யூலை 20 அன்று பாராளுமன்ற ஒப்புதலினைப் பெற்றுக்கொண்டு, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது 2023 செத்தெம்பரில் சட்டமியற்றப்பட்டதுடன், இது நாணய விதிச் சட்டத்தினை நீக்கியது. இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியின் சுயாதீனத்தினை வலுப்படுத்துகின்ற வேளையில், நாணய-இறை ஒருங்கிணைப்பின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பல்வேறு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்றது.

இறைத் துறையில் பல்வேறு சட்டவாக்கச் சீர்திருத்தங்களும் தொடங்கப்பட்டன. இவற்றிற்கிடையில், 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டமானது பாராளுமன்றத்தில் 2024 யூனில் நிறைவேற்றப்பட்டது. பொதுப்

4. நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2024 திசெம்பர் 02 அன்று தாபிக்கப்பட்டது. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் நியமிக்கப்பட்ட திகதியான 2024 நவெம்பர் 18 இலிருந்து 18 மாதங்களுக்குள் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது முழுமையாகத் தொழிற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது முழுமையாகத் தொழிற்பாட்டிற்கு வந்தவுடன், மத்திய வங்கி அதன் படுகடன் முகாமைத்துவ முகவராண்மைத் தொழிற்பாட்டினைக் கைதுறக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, நாட்டின் படுகடன் முகாமைத்துவத் தோற்றப்பாடானது குறிப்பிடத்தக்க மாறுதலடைதலொன்றினூடாகத் தற்போது நகர்கின்றது.

நாணய நிதியளிப்பானது நிறுத்தப்பட்டு, படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடானது மத்திய வங்கியிடமிருந்து அகற்றப்பட்டாலும்கூட, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திலும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்திலும் உள்ள தொடர்புடைய ஏற்பாடுகள் நாணய-இறை ஒருங்கிணைப்பின் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பினை நிச்சயப்படுத்துகின்றன. இதற்கமைய, வட்டி வீதங்கள், நிதியியல் முறைமை உறுதிப்பாடு பேணப்படுகின்றமை மற்றும் பொருளாதார அதிர்வுக் காலப்பகுதியில் அரசாங்கம் போதியளவில் ஆதரவளிக்கப்படுதல் போன்ற பேரண்ட மாறிகள் மீது தேவையற்ற அழுத்தம் செலுத்தப்படுவதில்லை என்பதை இவ்வேற்பாடுகள் நிச்சயப்படுத்துகின்றன.

இப்பின்னணியில், தொடர்புடைய அண்மைய சட்டவாக்கம் தொடர்பில் குறிப்பாக மத்திய வங்கியின் கண்ணோட்டத்திலிருந்து நாணய-இறை ஒருங்கிணைப்பின் இயக்கவாற்றல்களை அடுத்த பிரிவு ஆராய்கின்றது.

## 2 எதிர்வருகின்ற காலப்பகுதியில் நாணய-இறை ஒருங்கிணைப்பு

இப்பிரிவில், இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் என்பவற்றின் கீழ் எதிர்வருகின்ற காலப்பகுதியில் நாணய-இறை ஒருங்கிணைப்பினை நாம் ஆராய்கின்றோம்.

### 2.1 இலங்கை மத்திய வங்கிச் சட்டம்

விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதனையும் வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை மீளக்கட்டியெழுப்புவதனையும் கொண்ட பரந்தளவிலான நோக்கத்தின் கீழ் மத்திய வங்கியின் சுயாதீனத்தினை வலுப்படுத்துவதற்கான தேவைப்பாட்டினை பன்னாட்டு நாணய நிதியம் 2023 மாச்சில் குறித்துக்காட்டியது (பன்னாட்டு நாணய நிதியம், 2023). 2023 செத்தெம்பரில் சட்டமியற்றப்பட்ட புதிய இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியின் சுயாதீனத்தினை மேம்படுத்தும் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. அதேவேளையில், நாணய-இறை ஒருங்கிணைப்பின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்தும் வேளையில் மத்திய வங்கியின் சுயாதீனத்தினைப் பாதுகாக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்குப் பல முக்கிய வழிமுறைகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

#### 2.1.1 ஒருங்கிணைப்புச் சபையொன்றின் நிறுவுகை

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் கிடைக்கப்பெறுகின்ற ஏற்பாடுகளின் கீழ் ஒருங்கிணைப்புச் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது.[5] இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடுசார் கொள்கைகளை ஒருங்கிணைப்பதே ஒருங்கிணைப்புச் சபையின் முக்கிய குறிக்கோளாகும். மத்திய வங்கி ஆளுநரின் தலைமையில், திறைசேரியின் செயலாளர் மற்றும் பொருளாதாரக் கொள்கை எனும் விடயமானது நிதியமைச்சர் தவிர்ந்த அமைச்சரொருவருக்குக் குறித்தொதுக்கப்படும் பட்சத்தில் பொருளாதாரக் கொள்கை எனும் விடயமானது குறித்தொதுக்கப்படும் அமைச்சரின் அமைச்சின் செயலாளர் ஆகியோரை ஒருங்கிணைப்புச் சபை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடுகள் மற்றும் இடர்நேர்வுகள் என்பன குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் ஒருங்கிணைப்புச் சபையானது ஒவ்வொரு காலாண்டிலும் கூடுதல் வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடுசார் கொள்கைகள் குறித்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஒருங்கிணைப்புச் சபைக்கு எவ்வித அதிகாரமும் காணப்படுவதில்லையென்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இருப்பினும், நாணய மற்றும் இறைக் கொள்கை அதிகாரிகள் ஒருவருக்கொருவர் உயர்ந்தளவிலான மட்டத்தில் ஈடுபாட்டினைக் கொண்டிருப்பதற்கு ஆக்கபூர்வமான, சுருக்கமான மற்றும் முறையான தளமொன்றினை ஒருங்கிணைப்புச் சபை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியியல் உறுதிப்பாட்டிற்குக் குறிப்பிடத்தக்க இடர்நேர்வொன்றினை ஏற்படுத்துகின்ற அல்லது பொருளாதார நடவடிக்கைகளில் கணிசமானளவிலான பாதகமான விளைவொன்றினைக் கொண்டிருக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்கள் அல்லது சூழ்நிலைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கும் அவசரகாலக் கூட்டமொன்றிற்குத் தலைவர் அழைப்பு விடுக்க முடியும். உயர்ந்தளவிலான மட்டத்திலான இக்கொள்கை ஒருங்கிணைப்பானது ஏதேனும்

5. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 83ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

வேறுபாடுகளை விரைவாகத் தீர்ப்பதன் மூலம், தேசிய அக்கறைசார்ந்த விடயங்களில் கூட்டான மற்றும் விரைவான பதிலிறுப்பொன்றினை உருவாக்குவதற்கு அதிகாரிகளை வசதிப்படுத்தும்.

எக்ஸ்ரர் அறிக்கையில் விரிவாக விவரிக்கப்பட்டவாறும் முன்னர் கலந்துரையாடப்பட்டவாறும், நாணயச் சபையில் ஒருங்கிணைப்புச் சபையினைச் சேர்ப்பதற்கான எண்ணமானது நாணய மற்றும் இறைக் கொள்கைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பினை நிச்சயப்படுத்துவதாகக் காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆளும் சபையிலிருந்து அரசாங்கத்தின் ஏதேனும் பிரதிநிதித்துவத்தினை நீக்குவதன் மூலம் எழக்கூடிய நாணய-இறை ஒருங்கிணைப்பின் ஏதேனும் இடைவெளியானது ஒருங்கிணைப்புச் சபையின் உருவாக்கத்தின் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது. பணவீக்கத்திற்கு எதிரான அதன் போராட்டத்தில் மட்டுமன்றி உறுதியான நீண்ட கால பொருளாதார வளர்ச்சியினை அடைவதில் முக்கிய பிரமாணமொன்றாகக் காணப்படுகின்ற மத்திய வங்கியின் கொள்கைச் சுயாதீனமானது சமரசம் செய்யப்படாமலிருப்பதனை இது நிச்சயப்படுத்துகின்றது (Adrian, T, 2024). ஆதலால், முன்னோக்கிச் செல்கையில், மத்திய வங்கியின் சுயாதீனத்தினை வலுப்படுத்துவதற்கான பரந்தளவிலான மற்றும் நன்கு அங்கீகரிக்கப்பட்ட குறிக்கோளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணய-இறை ஒருங்கிணைப்பில் ஒருங்கிணைப்புச் சபை மையக்கல்லொன்றாகத் தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருங்கிணைப்புச் சபையினால் வழங்கப்பட்ட தளத்திற்கு மேலதிகமாக, நாணய, வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், நிதியியல் முறைமை உறுதிப்பாடு, நெருக்கடித் தடுப்பு மற்றும் நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் இறைசார் விடயங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள் குறித்து அரசாங்கம் மற்றும் ஏனைய பொது அதிகாரிகளுடன் கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.[6] இது மத்திய வங்கியின் சுயநிர்ணயம், பொறுப்புக்கூறும்தன்மை மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றுக்கு பங்கமின்றியிருப்பதனை நிச்சயப்படுத்துகின்றது. மேலும், மத்திய வங்கியும் நிதியமைச்சரும் மத்திய வங்கியினதும் நிதியமைச்சினதும் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஒருவருக்கொருவர் முழுமையாகத் தெரிவித்துக் கொள்ளுதல் வேண்டும்.

### 2.1.2 நாணய நிதியளித்தலின் நிறுத்தம்

நாணய-இறை இயக்கவாற்றல்களில் சர்ச்சைக்குரியதொரு புள்ளியாக நாணய நிதியிடல் அதாவது நாணயத்தினை உருவாக்குவதன் ஊடாக அரசாங்கத்திற்கு நிதியிடல் காணப்படுகின்றது (Agur, Dell'Ariccia, and Sandri, 2022). இலங்கையின் பின்னணியில், திறைசேரியானது சந்தை வழங்கல்களின் ஊடாக அத்தகைய பற்றாக்குறைக்கு நிதியளிக்க முடியாதிருக்கும் பட்சத்தில், ஏலப் பற்றாக்குறைகளை ஈடுசெய்யும் பொருட்டு அரசாங்கம் மத்திய வங்கிக்குத் திறைசேரி உண்டியல்களை வழங்கியது. மேலும், மத்திய வங்கிக்கு திறைசேரி உண்டியல்களின் சிறப்பு வழங்கல்களின் ஊடாக அரசாங்கத்தின் அவசர நிதியிடலிற்கான தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டன. திறைசேரி உண்டியல்களிற்கான நேரடி விலைக்கோரல்களை மேற்கொள்ளக்கூடிய மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு குறுங்காலப் பிணையங்களின் போதியளவிலான கையிருப்புக்களைப் பேணக்கூடிய நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஊடாக இவ்வழங்கல்கள் வசதிப்படுத்தப்பட்டன.[7] அத்தகைய விதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக திரவத்தன்மை முகாமைத்துவ நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்பட்டன.

இருப்பினும், கொவிட் நோய்த்தொற்றுக் காலப்பகுதியிலும் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த காலப்பகுதியிலும், நாணய நிதியளிப்பானது முன்னெப்பொழுதுமில்லாத மட்டங்களை எட்டியது. மத்திய வங்கியின் முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தைக் கொள்வனவுகள் மற்றும் 2020 தொடக்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கான சிறப்பு வழங்கல்கள் என்பன 2022 திசெம்பரிலுள்ளவாறு 2021 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14 சதவீதத்தினை எட்டியதென்பதனை பன்னாட்டு நாணய நிதியம் எடுத்துக்காட்டியது. பாரியளவிலான நாணய நிதியளிப்பானது மத்திய வங்கியின் தொழிற்பாட்டுச் சுயாதீனத்தினை விட்டுக்கொடுத்ததுடன் அதன் விலை உறுதிப்பாட்டுப் பணிப்பாணையினை இடரிற்குள்ளாக்கியதாக அது மேலும் குறித்துக்காட்டியது (பன்னாட்டு நாணய நிதியம், 2023). 2022 ஒகத்து இறுதியிலுள்ளவாறு, மத்திய வங்கியின் அரச பிணையங்களின் கையிருப்பானது ரூ. 2,258.1 பில்லியன் தொகைக்கு அதிகரித்து, 2020இன் இறுதியில் காணப்பட்ட ரூ. 725.2 பில்லியன் தொகையிலான கையிருப்புடன் ஒப்பிடுகையில் கணிசமானளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. 2022 ஒகத்தில், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே, மத்திய வங்கி நாணய நிதியளிப்பினைக் குறைக்கத் தொடங்கியதுடன் அதன் திறைசேரி உண்டியல் கையிருப்புக்களின் சுமையினைக் குறைப்பதற்கான திட்டங்களை வகுத்தது.

6. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 84ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

7. நாணய விதிச் சட்டத்தின் 90 மற்றும் 112ஆம் பிரிவுகளைப் பார்க்கவும்.

நாணய நிதியளிப்பானது இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டது.[8] அதேவேளையில், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதியொன்றாக மத்திய வங்கி அதன் திறைசேரி உண்டியல் கையிருப்பினையும் அரசாங்கத்திற்கு அது வழங்கிய முற்பணங்களையும் மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்துடன் உடன்பட்டது. இதற்கமைய, 2023 செத்தெம்பர் 14 அன்று, மத்திய வங்கியின் மூலம் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் மத்திய வங்கியின் மூலம் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் ரூ. 2,492.3 பில்லியன் தொகையாக விளங்கியதுடன், இவை 2038 வரையான காலப்பகுதியில் முதிர்ச்சியடைகின்ற திறைசேரி முறிகளிற்கு மாற்றப்பட்டன. மேலும், ரூ. 220.8 பில்லியன் தொகையாக விளங்கிய திறைசேரி உண்டியல் முதிர்வுகளும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விரிவாக்கப்பட்டன. அதேவேளை, அரசாங்கத்தினால் நாணய நிதியளிப்பினை அணுக முடியாத சூழ்நிலையில் ஒழுங்கமைப்பான சந்தை நிலைமைகளைப் பேணும் பொருட்டு, அரச பிணையங்களின் சந்தையில் ஏதேனும் தேவையற்ற வட்டி வீத அழுத்தங்களைத் தணிப்பதற்குத் திறைசேரியின் காசுத் தாங்கியிருப்புக்களைத் தகுந்த நேரத்தில் கட்டியெழுப்புவதனை மத்திய வங்கி வசதிப்படுத்தியது.

இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கி இரண்டாந்தரச் சந்தையிலிருந்து அரச பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கும் அத்தகைய பிணையங்களின் போதியளவிலான இருப்பொன்றினைப் பேணுவதற்கும் அனுமதிக்கின்றது.[9] நெருக்கடியான சூழ்நிலையொன்றினை அவசரமாக முகாமைத்துவம் செய்யும் பொருட்டு கணிசமானளவிலான நிதியங்களை அரசாங்கம் தேவைப்படுத்தக்கூடிய சூழ்நிலையொன்றினையும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் கருத்திற்கொண்டுள்ளது. இதற்கமைய, பொது விதியொன்று காணப்படுகின்ற போதிலும், பொதுப் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கைப் பேணிக்காத்தல் அல்லது சந்தை நிதியிடலிற்கான அரசாங்கத்தின் மூலமான அணுகலினை கணிசமானளவில் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இடையூறிற்குட்படுத்துகின்ற அல்லது வரையறைக்குட்படுத்துகின்ற உலகளாவிய சுகாதார அவசரநிலைமையிலான நலன் கருதி, மத்திய வங்கியானது முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ய முடியும். இருப்பினும், அத்தகைய கொள்வனவுகள் பல்வேறு கண்காணிப்பு மற்றும் சமநிலைப்படுத்தல்களிற்கு உட்பட்டனவாகக் காணப்படுவதுடன் தொடர்புடைய நிதியியல் ஆண்டிற்குப் பொருந்தக்கூடிய ஒப்புதலளிக்கப்பட்ட திறைசேரி உண்டியல் வரையறையின் 5 சதவீதத்தினை விஞ்சிக் காணப்பட முடியாது.[10]

நாணய நிதியளிப்பை நிறுத்தியமை மத்திய வங்கியின் சுயநிர்ணயத்தினை வலுப்படுத்துவதுடன் அதன் விலை உறுதிப்பாட்டுப் பணிப்பாணைக்குத் தத்துவமளிக்கின்றது. இது திறைசேரியில் முன்மதியுடைய காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்தினையும் தூண்டுகிறது. மேலும், நாணய நிதியளித்தலின் நிறுத்துகையானது நாணய-இறை இயக்கவாற்றல்களில் இதுவரை காணப்படுகின்ற சர்ச்சைக்குரிய புள்ளியொன்றினை நீக்குகின்றது. ஆதலால், முன்னோக்கிச் செல்கையில் நாணய-இறை ஒருங்கிணைப்பின் மிகவும் ஆக்கபூர்வமான கட்டமொன்றிற்கு இது வழிவகுக்கலாம்.

### 2.2 பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம்

பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தினை வரைவுசெய்வதற்கு பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றிலிருந்து விரிவான தொழில்நுட்ப உதவியினை அரசாங்கம் பெற்றுக்கொண்டது. இலங்கையின் பின்னணியில் படுகடன் அலுவலகமொன்று என்ற எண்ணக்கருவின் புதுமை இதற்கு முக்கிய காரணமாயமைந்தது. மத்திய வங்கி அதன் படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் குறித்த உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் சட்டத்தின் வரைவிற்குப் பங்களித்தது.

#### 2.2.1 பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் நிறுவுகை

பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டமானது 2024 யூன் 18 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் “நியமிக்கப்பட்ட திகதி”[11] சட்டத்தின் ஒப்புதலிலிருந்து 6 மாதங்களினுள் காணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டது.[12] அமைச்சர் வர்த்தமானியில் வெளியிட்ட கட்டளையின் மூலம் 2024 நவெம்பர் 25 ஆம் திகதியினைப் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் நியமிக்கப்பட்ட திகதியாகப் பிரகடனம் செய்ததுடன், இது பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வர வேண்டிய திகதியாயமைந்தது. பொதுப்

8. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86ஆம் பிரிவினைப் பார்க்கவும். இருப்பினும், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86(5)ஆம் பிரிவிற்கமைய, இத்தடையானது குறித்த சில முன்கூட்டி வரையறுக்கப்பட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் பிரயோகமாவதில்லை.
9. 9. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86(4)ஆம் பிரிவினைப் பார்க்கவும்.
10. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86(5)ஆம் பிரிவினைப் பார்க்கவும்.
11. நியமிக்கப்பட்ட திகதியென்பது சட்டமொன்று நடைமுறைக்கு வருகின்ற திகதியாகும்.
12. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் 1(4)ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2024 திசெம்பர் 02 அன்று தாபிக்கப்பட்டது.

அதேவேளை, பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மை அல்லது அலுவலகத்துடன் தொடர்புடைய இயைபான சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதி வரை அரசாங்கத்தின் முகவராக[13] மத்திய வங்கி தொடர்ந்து செயற்படுதல் வேண்டும்.[14] இருப்பினும், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் மேலுள்ள பிரிவின் ஏற்புடைத்தன்மையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 18 மாதங்களினுள் நிதியமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டமானது ஏற்பாடுசெய்கின்றது. சுருக்கமாக, பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் நியமிக்கப்பட்ட திகதியான 2024 நவெம்பர் 25 இலிருந்து 18 மாதங்களினுள் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது தொழிற்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது.

முழுமையாகத் தொழிற்பாட்டிற்கு வந்தவுடன், மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்கள் என்பவற்றிற்கிடையில் தற்போது சிதறலடைந்து காணப்படுகின்ற படுகடன் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்துத் தொழிற்பாடுகளையும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது மையப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கி பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் முழுமையான தொழிற்பாட்டுடன் அதன் படுகடன் முகாமைத்துவ முகவராண்மைத் தொழிற்பாட்டினைக் கைதுறக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு அதன் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் சீரான நிலைமாறுதலொன்றினை நிச்சயப்படுத்துகின்ற செயன்முறையில் தற்போது ஈடுபட்டுள்ளது. இருப்பினும், அரச பிணையங்களின் பதிவேட்டின் பேணுகையானது மத்திய வங்கியில் தொடர்ந்து மேற்கொள்ளப்படக்கூடும்.

### 2.2.2 பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழு

பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது.[15] பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவானது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்களில் இருவர் மத்திய வங்கியினைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவர். திறைசேரித் தொழிற்பாடுகள், இறைக் கொள்கை, வெளிநாட்டு வளங்கள், தேசிய வரவு செலவுத்திட்ட மற்றும் பொது தொழில்முயற்சிகள் ஆகிய திணைக்களங்களின் பணிப்பாளர் தலைமையதிபதிகள் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ஆகியோரை உள்ளடக்கிய திறைசேரிப் பிரதிநிதிகளுடன் திறைசேரியின் துணைச் செயலாளரொருவரினால் இது தலைமை தாங்கப்படுகின்றது. மத்திய வங்கியின் இரண்டு அலுவலர்கள் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவாறு பணிப்பாளர் பதவி வரிசையிலுள்ள அல்லது பதவிவரிசைக்கு மேற்பட்டவர்களாகக் காணப்படுவர். பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட படுகடன் முகாமைத்துவ உபாயம் மற்றும் அதன் இற்றைப்படுத்தல்கள் என்பவற்றினை மீளாய்வு செய்வதன் மூலமும் கருத்துத் தெரிவிப்பதன் மூலமும் பேரண்டப்பொருளாதாரக் கொள்கைகளுடன் படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் ஒத்திசையும்தன்மையினைப் பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழு நிச்சயப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் மற்றும் அதன் செயலாற்றம் குறித்து மீளாய்வு செய்து, கருத்துத் தெரிவிக்குமெனவும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தை நிலைமைகளை மீளாய்வு செய்யுமெனவும் பொதுப் படுகடன் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் குறித்த மற்றும் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி குறித்த பரிந்துரைகளை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.2.3 நாணயக் கொள்கைக் குறிக்கோள்களின் நடைமுறைப்படுத்தலிற்கான அரச படுகடன் பிணையங்களின் வழங்கல்கள்

நாணயக் கொள்கைக் குறிக்கோள்களின் நடைமுறைப்படுத்தலிற்கான அரச படுகடன் பிணையங்களின் வழங்கல்கள் குறித்து பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டமானது ஏற்பாடு செய்கின்றது.[16] மத்திய வங்கியினால் கோரிக்கை விடுக்கப்படுமாயின் மற்றும் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் நோக்கங்களிற்கானதெனத் தெளிவாகப் புலப்படுமாயின் மாத்திரமே இத்தகைய வழங்கல் மேற்கொள்ளப்படும். வழங்கப்பட்ட பிணையங்களின் முதிர்வில்

13. இது அரசாங்கத்தின் கணக்கிற்கான அரச பிணையங்களின் வழங்கல் தொடர்பிலும் பொதுப் படுகடன் முகாமைத்துவம் தொடர்பிலும் மாத்திரம் வரையறுக்கப்படும்.
14. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 132ஆம் பிரிவினைப் பார்க்கவும்.
15. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் 8, 9 மற்றும் 10 ஆகிய பிரிவுகளைப் பார்க்கவும்.
16. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் 14ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

மீள்செலுத்தப்படும் பொருட்டு இத்தகைய வழங்கல்களின் பெறுகைகள் மத்திய வங்கியின் தனியான கணக்கொன்றில் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. இத்தொழிற்பாட்டின் ஊடாக நாணய நிதியளிப்பு மேற்கொள்ளப்படுவதில்லை என்பதனை இது நிச்சயப்படுத்துகின்றது. இத்தகைய வழங்கல்களின் வட்டிச் செலவானது மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுவதுடன் இவ்வழங்கல்கள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன்பெறுகை வரையறைக்குக் கருத்திற்கொள்ளப்படுவதில்லை.

### 2.2.4 முதனிலை வணிகர்களின் நியமனம் மற்றும் முதனிலை வணிகர் நடவடிக்கைகளின் ஒழுங்குவிதி, மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு

பொதுவாக, முதனிலை வணிகர்களின் வகிபாகமானது அரச பிணையங்களின் பகிர்ந்தளிப்பினை வசதிப்படுத்துகின்ற வேளையில் உள்நாட்டுப் படுகடன் சந்தையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதாகும் (Speian, 2022). இலங்கையின் பின்னணியில், ஊழியர் சேமலாப நிதியத்துடன் இணைந்து முதனிலை வணிகர்களிற்கு அரச பிணையங்களின் முதலாந்தர வழங்கலில் நேரடியாக விலைக்குறிப்பீட்டினை மேற்கொள்வதற்கான பிரத்தியேக உரிமை வழங்கப்பட்டுள்ளது. 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் அவற்றின் தொடர்புடைய திருத்தங்கள் என்பவற்றிலுள்ள தொடர்புடைய ஏற்பாடுகளின் கீழ் மத்திய வங்கி முதனிலை வணிகர்களை நியமித்தது. மேலும், பிணையங்களில் முதனிலை வணிகர்களின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் முதனிலை வணிகர்களென்ற ரீதியில் அவர்களின் கடமைகளின் செயலாற்றம் என்பவற்றுடன் தொடர்புடைய ஒழுங்குவிதி, மேற்பார்வை அல்லது கண்காணிப்பு என்பனவும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டன.[17] 2024 யூலை இறுதியிலுள்ளவாறு, வங்கிகளுடன் இணைந்த 5 முதனிலை வணிகர்கள் மற்றும் 5 தனியான முதனிலை வணிகர்கள் உள்ளடங்கலாக 10 வினைத்திறன்மிக்க முதனிலை வணிகர்கள் காணப்பட்டனர்.

பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் தொழிற்படுத்துகையுடன் முதனிலை வணிகர்களின் நியமனமானது மத்திய வங்கியின் பரிந்துரையின் பேரில், அமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.[18] முதனிலை வணிகரொருவரின் முக்கிய வகிபாகமானது அரச பிணையங்களிற்கான முதலாந்தர ஏலங்களில் விலைக்குறிப்பீட்டினை மேற்கொள்வதாகும். பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது தொழிற்பாட்டிற்கு வந்தவுடன் முதலாந்தர ஏலங்கள் அதனால் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதலால், அத்தகையதொரு சூழ்நிலையில் முதனிலை வணிகர்களை நியமிக்கும் அதிகாரமானது அமைச்சரிடம் காணப்படுவது பொருத்தமானதாயமையலாம். மேலும், முதனிலை வணிகரொருவரின் மூலமான சட்ட அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் ஏதேனும் இணங்கியொழுகாமை குறித்து அமைச்சருக்குத் தெரிவிப்பதற்கு மத்திய வங்கி தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது முதனிலை வணிகரொருவரென்ற ரீதியில் அவரின் கடமைகளின் செயலாற்றத்தினைப் பொருட்படுத்தாமல் முதனிலை வணிகரொருவராக அவரின் நியமனத்தை இரத்து செய்வதற்கோ இடைநீக்கம் செய்வதற்கோ காரணமொன்றாக அமையலாம்.

மறுபக்கம், முதனிலை வணிகரொருவரென்பது வங்கிகள் போன்ற வைப்புத்தொகைகளை ஏற்கின்ற நிறுவனங்களை உள்ளடக்கின்ற பரந்தளவிலான நிதியியல் சந்தையில் தொழிற்படுகின்ற நிதியியல் நிறுவனமொன்றாகக் காணப்படுகின்றது. மேலும், திரவத்தன்மை முகாமைத்துவ நோக்கங்களுக்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் என்பவற்றிற்கான அணுகலினை முதனிலை வணகர்கள் கொண்டிருக்கின்றனர். ஆதலால், உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள தற்போதைய முதனிலை வணகர்கள் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படக்கூடிய எவரேனும் புதிய முதனிலை வணகர்கள் மத்திய வங்கியினால் தொடர்ந்து ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு, மேற்பார்வைசெய்யப்பட்டு, கண்காணிக்கப்படுவர். மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துகின்ற பொறுப்பினை அங்கீகரிக்கின்ற விதத்தில் இது காணப்படுகின்றது. எனவே, முன்னோக்கிச் செல்கையில், முதனிலை வணிகர்களின் நியமனம் மற்றும் முதனிலை வணிகர்களின் செயற்பாடுகளின் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு என்பன தொடர்பில் ஒருங்கிணைந்த நாணய-இறை அணுகுமுறையொன்றின் அடிப்படையிலான நடைமுறை

17. பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21இ (2024 திசெம்பர் 31 வரையான திருத்தங்களை உள்ளடக்கியது) மற்றும் 1995ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறு உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) பிரிவு 16இன் கீழ் நிதியமைச்சரினால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் ஆகியவற்றினைப் பார்க்கவும்.

18. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் 31ஆம் பிரிவினைப் பார்க்கவும்

ரீதியிலானதோர் ஏற்பாடு எட்டப்பட்டுள்ளதாகப் புலப்படுகின்றது.

## 3 முடிவுரை

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டமியற்றலின் பின்னர் ஆளும் சபையிலிருந்து திறைசேரியின் செயலாளரை நீக்குவதன் மூலம் எழக்கூடிய கொள்கை ஒருங்கிணைப்பின் ஏதேனும் இடைவெளியானது இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளின் ஊடாகத் தீர்க்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது கொள்கை மட்டத்தில் நாணய மற்றும் இறைசார் அதிகாரிகளுக்கு இடையிலான ஈடுபாட்டிற்கான தளமொன்றினை வழங்குகின்றது. மத்திய வங்கியின் தொழிற்பாட்டுச் சுயநிர்ணயம் மற்றும் நோக்கங்களைச் சமரசம் செய்யாமல் எதிர்பார்க்கப்படுகின்ற நாணய-இறை ஒருங்கிணைப்பின் பேணுகையினையும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் நிச்சயப்படுத்துகின்றது. அதேவேளை, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது எதிர்பார்த்தவாறு தொழிற்படுத்தப்பட்டவுடன் பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவானது நாணய-இறை ஒருங்கிணைப்பினைப் பெருமளவிலான தொழிற்பாட்டு மட்டமொன்றில் நிச்சயப்படுத்தும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, முன்னோக்கிச் செல்கையில் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் என்பவற்றின் கீழ் கிடைப்பனவாகவுள்ள பொறிமுறைகள் நாணய மற்றும் இறை அதிகாரிகளுக்கு இடையிலான மிகவும் நெறிப்படுத்தப்பட்ட, வினைத்திறன்மிக்க மற்றும் வலுவான மட்டத்திலான ஒருங்கிணைப்பொன்றினை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது இரு தரப்பினரதும் அக்கறைகளைப் பாதுகாக்கின்ற வேளையில் ஒருவருக்கொருவர் கொள்கைகளை அத்துமீறாதிருப்பதனை நிச்சயப்படுத்துகின்றது. எனவே, மத்திய வங்கியின் தொடக்கத்தில் எக்ஸ்ரர் அறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட நாணய-இறை ஒருங்கிணைப்பானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்போதிலும், மீளெழுச்சிப்படுத்தப்பட்ட மற்றும் நெறிப்படுத்தப்பட்ட நிறுவனசார் கட்டமைப்பொன்றினுள் சமகால பொருளாதாரத் தோற்றப்பாட்டுடன் மிகவும் இணைந்ததாயமைகின்றது.

## 4 உசாத்துணை


Adrian, T. (2024, June 14). Central Bank Independence: Why It’s Needed and How to Protect It. Retrieved from International Monetary Fund: https://www.imf.org/en/News/Articles/2024/06/17/sp061424-central-bank-independence

Agur, I., Dell’Ariccia, G., & Sandri, D. (2022, February 22). Should Monetary Finance Remain Taboo? Retrieved from IMF Blog - Central bank autonomy: https://www.imf.org/en/Blogs/Articles/2022/02/22/should-monetary-finance-remain-taboo

Exter, J. (1949). Report on the Establishment of a Central Bank for Ceylon. Ceylon Government Press.

International Monetary Fund. (2023). IMF Country Report No. 23/116. IMF.

Laurens, B., & Piedra, E. G. (1998). Coordination of monetary and fiscal policies.

Speian, O. (2022). The Role Of The Primary Dealers In The Government Securities Market. Eastern European Journal for Regional Studies (EEJRS), 68-81.



# பசுமை முறிகளின் கட்டமைப்புசார் அம்சங்களும் ஓய்வூதிய நிதியங்களுக்கான அதன் ஏற்புத்தன்மையும்

**எல் டி எஸ் ஆர் குணசேகர**
மூத்த உதவிக் கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்

**பின்னணி**

தற்கால மூலதனச் சந்தைகள், முதலீட்டாளர்களிடம் இருந்து நிதியங்களைக் கவர்வதற்கான பல்வேறு வழிகளை தொடர்ச்சியாக நாடிவருவதுடன் அவ்வகையில் பசுமை முயற்சிகளுடன் கூடிய நிதியியல் சாதனங்களை வழங்கல் பிரதான வகிபாகத்தை கொண்டுள்ளது. பசுமை முறிகள் என்பது தாக்கமுறிகளின் (பசுமை, சமூக, நிலைபேண்தகு மற்றும் நிலைபேண்தகு தொடர்புடையவற்றின்) துணைப்பகுதிகள் ஆகும். பசுமை முயற்சியை பேணுதல் தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய படுகடன் சாதனங்கள் தொடர்பில் பல்வேறு நாடுகளிலும் முதலீட்டின் கவர்ச்சிகரமான முதலீட்டு மூலமொன்றாக பசுமை முறிகள் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன.

மொத்த பசுமை முறி வழங்கல் 2024 இல் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 583 பில்லியன் ஆக பதிவாகியுள்ளது. பெரும்பாலும் பசுமை முறிகளை வழங்குபவர்களாக அரசாங்கங்களே காணப்படுவதுடன் 2023 இல் அரசாங்கத்தினால் மொத்தமாக ஐ.அ.டொலர் 190 பில்லியன் பசுமை முறிகள் வழங்கப்பட்டன. பசுமை முறிகள் பற்றிய விரிவான நோக்கத்தையும் அதன் கட்டமைப்புசார் அம்சங்களையும் வழங்கி ஓய்வூதிய நிதியங்களுக்கான முதலீடுகளின் மூலமாக அதன் ஏற்புத்தன்மையையும் மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பசுமை முறிகள் பற்றிய அறிமுகம்**


சாதகமான சூழலியல் தாக்கத்தைக் கொண்டுள்ள நிதியிடல் கருத்திட்டங்களின் நோக்கத்திற்காக வழங்கப்படும் படுகடன் சாதனங்களே பசுமை முறிகள் என்பதற்கான எளிய வரைவிலக்கணம் ஆகும். இவை அரசாங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படமுடியும் என்பதுடன் ஏனையவற்றிற்கு மத்தியில் மீள்புதுப்பிக்கத்தக்க வலு, வலு வினைத்திறன், நிலைபேண்தகு கழிவு முகாமைத்துவம், உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு மற்றும் தூய போக்குவரத்து என்பவற்றுடன் தொடர்புபட்ட சூழலியல் மற்றும் நிலைபேண்தகு திட்டங்களுக்கு நிதியிட உதவுவதற்கு இவற்றைப் பயன்படுத்த முடியும்.

பசுமை முறிகள் ஏனைய முறிகளுக்கு ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பதுடன் இதனால் ஏனைய முறியைப் போன்றே விலையிடல் பொறிமுறையைப் பகிர்கின்றன. மீள்புதுப்பிக்கத்தக்க வலு (காற்று, நீர் மற்றும் சூரிய போன்ற), மீள்சுழற்சி முயற்சிகள், தூய போக்குவரத்து மற்றும் நிலைபேண்தகு வனபரிபாலனம் போன்றவற்றிற்கு இம்முறிகள் பங்களிப்புச்செய்யமுடியும். பசுமை முறிகளின் முதலீட்டாளர்கள் தனியாள் முதலீட்டாளர்களாக இருக்க முடியாது என்பதுடன் பொதுவாக முறிகளை தொகையாக கொள்வனவு செய்யக்கூடிய ஓய்வூதிய நிதியங்கள் போன்ற நிறுவனசார் முதலீட்டாளர்களுக்கு விற்கப்படுகின்றன.

பசுமை முறிகளின் முதலாவது வழங்கல் 2007 இல் பதிவுசெய்யப்பட்டிருந்தது. பசுமை முறிச் சந்தையின் மெதுவானதும் உறுதியானதுமான வளர்ச்சிக்கு காலநிலை மாற்றம் தொடர்பான பரிஸ் உடன்படிக்கையும் ஐக்கிய நாடுகள் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் போன்ற உலகளாவிய பசுமை முயற்சிகள் உதவியளித்தன.

ஒவ்வொரு ஆண்டிலும் தாக்க முறிகளை வழங்குவதில் பசுமை முறிகளின் வழங்கல் ஆதிக்கம் செலுத்துகின்றன என்ற விடயத்தை பிரதிபலிக்கின்ற தாக்க முறிகளின்

**வரைபடம் 1 : தாக்க முறிகளின் வருடாந்த வழங்கல் (ஐ.அ.டொலர் பில்லியன்)**




வருடாந்த விநியோகத்தை படம் 1 விளக்குகின்றது. பசுமை முறிகளின் பிரதான வழங்குநராக அரசாங்கங்கள் செயற்படுவதுடன் பசுமை முறிகளின் வழங்கலில் ஈடுபட்டுவருகின்ற பிரதான பிராந்தியமாக ஐரோப்பா இருந்து வருகின்றது. இந்நூதனமான நிதியியல் உருவாக்கத்தை கவனத்திற்கொள்கையில், நேரடியான சூழலியல் மற்றும் சமூக நலன்களைக்கொண்ட கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக வழங்கப்படும் நிலையான வருமான பிணையங்களுக்கான உலகளாவிய சந்தையின் குறிக்கோளையும் பலமான நடவடிக்கையையும் முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்ற உலகளாவிய மொத்த பசுமை, சமூக மற்றும் நிலைபேண்தகு சுட்டெண் (GSS Index) என்பவற்றை புளூம்பேர்க் உருவாக்கியுள்ளது.


### பசுமை முறி கோட்பாடுகள்

சந்தையில் அதிக வெளிப்படைத்தன்மையை இயலச்செய்வதற்காக பன்னாட்டு மூலதன சந்தை அமைப்பினால் வழங்கப்பட்ட கோட்பாடுகள் பின்வருமாறு;

உலகளாவிய ரீதியில் பல நிறுவனங்கள் மிகவும் சூழலுக்கு நேயமான கருத்திட்டங்களுக்காக நிதி திரட்டும் நோக்குடன் பசுமை முறிகளை வழங்கியுள்ளன. அவற்றுக்கான சில சிறந்த உதாரணங்கள் பின்வருமாறு;

❖ வலு வினைத்திறன், கழிவு மீள்சுழற்சி மற்றும் நீர்ப் பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்துவதற்கான நிதி திரட்டும் நோக்கில் ஐ.அ.டொலர் 2 பில்லியன்

**வரைபடம் 2: பசுமை முறிகளை வழங்குவது தொடர்பான மூலதன சந்தை அமைப்பினால் வழங்கப்பட்ட கோட்பாடுகள்**



பெறுமதியான தனது முதலாவது பசுமை முறியை 2021 இல் வோல்மார்ட் வழங்கியது.

- 2020 ஆம் ஆண்டில், அப்பிள் நிறுவனமானது ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகின்ற 921,000 மெட்ரிக் டொன் காபன் வெளியேற்றத்தை தடுக்கும் நோக்கில் 17 பசுமை முறி திட்டங்களுக்கு நிதியளித்தது. இதற்கு மேலதிகமாக, மின்கட்டமைப்புக்கு சக்தியை வழங்கும் வேர்ஜினியாவின் ப்ரெடரிக்ஸ்பர்க் பகுதியில் சூரிய சக்தி விருத்திக்கும் அப்பிராந்தியத்தில் அப்பிள் இன் மின்சார பயன்பாட்டை உள்ளடக்கும் சிகாகோ பிராந்தியத்திற்கு அருகிலுள்ள காற்றாலையையும் இலக்காகக் கொள்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு செத்தெம்பரில் வோல்க்ஸ்வேகன் இனால் வழங்கப்பட்ட பசுமை முறியானது மின்சார கார் உற்பத்திக்கும் மின்னேற்ற நிலைய உட்கட்டமைப்பிற்கும் நிதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## குறைந்த ஆதாயம் தரும் பசுமை முறிகள்

பசுமைமுறிகள் பொதுவாக வேறு படுகடன் சாதனங்களுடன் ஒப்பிடுகையில் சற்று குறைவான ஆதாயத்தையே வழங்குகின்றன. பசுமை முறிகளுக்கும் வழமையான முறிகளுக்கும் இடையிலான விலை வேறுபாடே “குறைந்த ஆதாயம் தரும் பசுமை முறிகள்” ஆங்கிலத்தில் கிரீனியம் என அழைக்கப்படுகின்றது. பொதுவாக பசுமை முறிகளானவை சாதாரண வழமையான முறிகளை விட 0.15-0.20 சதவீதக் குறைவினை வழங்குவதை ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது. இயற்கையைப் பேணிப் பாதுகாத்து சூழல் மற்றும் சமூக நலன்களில் ஈடுபடுவதை பிரதான குறிக்கோளாக கொண்ட நிலைபேண்தகு முதலீட்டாளர்களுக்கு பசுமை முறிகள் வழங்கப்படுவதனாலும் ஏனைய வழமையான முறிகளுடன் ஒப்பிடுகையில் பசுமை முறிகளில் தவணை தவறுதலின் இடர்நேர்வு குறைவாக உணரப்படுவதுமே குறைந்த ஆதாயத்திற்கான பிரதான காரணங்கள் ஆகும். இருப்பினும், நீண்ட காலத்தில் பசுமை முறிகளின் வளர்ச்சியின் விளைவாக, பசுமை முறிகளின் ஆதாயமானது வழமையான முறிகளுடன் ஒத்துச்செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு பிரதான காரணம் பசுமை முறிகளின் அதிகரித்த வழங்கலானது விலைகளைக் குறைத்து, இதன் ஊடாக விளைவுகளில் மேல்நோக்கிய அழுத்தத்தை தீவிரப்படுத்தும் என்பதால் ஆகும்.

## ஓய்வூதிய நிதியங்களுக்கான மாற்றுவழி சொத்து வகுப்பு ஒன்றாக பசுமை முறிகள்

கடந்த 5 ஆண்டு காலப்பகுதியினுள் பசுமை முறிகளில் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய நிதியங்களின் முதலீடானது ஐ.அ.டொ 50 பில்லியனிலிருந்து ஐ.அ.டொ 250 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன் மொத்த வழங்கலின் சதவீதமாக 25 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆகையினால், பசுமை முறிச் சந்தையில் ஓய்வூதிய நிதி முதலீடுகளின் திடமான வளர்ச்சியை இது குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 3: பசுமை முறிகளை வழங்குவதில் ஓய்வூதிய நிதியங்களின் பங்களிப்பு**




மூலம்: பசுமை முறிகள் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் புளூம்பர்க்

**பசுமை முறிகளில் முதலீடு செய்யப்படும் ஓய்வூதிய நிதியங்களுக்கான உதாரணங்கள்**

- கலிபோர்னியா அரச ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் (CalPERS): கலிபோர்னியா அரச ஊழியர்களின் ஓய்வூதிய திட்டமானது அதன் நிலைபேண்தகு முதலீட்டு உபாயத்தின் ஓர் அங்கமாக பசுமை முறிகளில் குறிப்பிடத்தக்களவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.
- ஒல்லாந்து சிவில் பணியாளர்கள் ஓய்வூதிய நிதியம் (ABP): காபன் வெளியேற்றத்தை குறைக்கும் அதன் அர்ப்பணிப்புடன் இணைந்ததாக, ஒல்லாந்து சிவில் பணியாளர்கள் ஓய்வூதிய நிதியமானது அதன் முதலீட்டு நிதிச்சொத்துப்பட்டியலில் பசுமை முறிகளை அதிகம் முதலீடு செய்துள்ளது.
- உலகளாவிய நோர்வே அரசாங்க ஓய்வூதிய நிதியம் (GPFG): உலகளாவிய நோர்வே அரசாங்க ஓய்வூதிய நிதியமானது காபன் சுவடுகளை குறைப்பதற்கான அதன் உபாயத்துடன் இணைந்ததாக பசுமை முறிகளில் அதன் முதலீடுகளை கணிசமானளவு அதிகரித்தது.
- கலிபோர்னியா மாநில ஆசிரியர் ஓய்வூதியத் திட்டம் (CalSTRS): கலிபோர்னியா மாநில ஆசிரியர் ஓய்வூதியத் திட்டமானது பசுமை முறிகளை நோக்கி மேற்கொள்ளப்படும் புதிய முதலீடுகளின் கணிசமான பாகத்துடன் நிலைபேண்தகு முதலீடுகளின் தொடர்ச்சியாக முன்னணியில் இருந்துவருகின்றது.
- கனடா ஓய்வூதியத் திட்ட முதலீட்டுச் சபை (CPPIB): கனடா ஓய்வூதியத் திட்ட முதலீட்டுச் சபையானது மீள்புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் நிலைபேண்தகு உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்காக வழங்கப்படும் முறிகளில் கவனம்செலுத்தி அதன் பசுமை முறிகளை விரிவாக்கம் செய்தது.
- 2030 ஆம் ஆண்டளவில் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைக் கோட்பாடுகளுடன் 100 சதவீத இணக்கத்தை அடைவதையும் 2050ஆம் ஆண்டளவில் காபன் சமனிலையை அடையும் அதன் குறிக்கோளுடன் இணங்கியிருக்கும் அதன் இலக்கிற்கு ஆதரவளிக்க பசுமை முறிகளில் முதலீடு செய்ய மலேசியாவின் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

பசுமை முறிகளில் முதலீடு செய்வதற்காக பல ஓய்வூதிய நிதி முதலீட்டாளர்களை கவர்ந்துள்ள பிரதான பிராந்தியங்களுள் ஒன்றாக ஐரோப்பா திகழ்கின்றது. ஆசியப் பிராந்தியத்தில், பாரிய, நீண்டகால பசுமை உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்கு நிதியிடுவதற்கு பசுமை சிங்கப்பூர் அரசாங்க பிணையங்களை (Green SGS) சிங்கப்பூர் அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது. விலை நிர்ணயம் மற்றும் வருமான ஈட்டல் அடிப்படையில் பசுமை முறிகள் மிகவும் ஒத்த தன்மையுடையதாக இருக்குமாயின், ஓய்வூதிய நிதி ஏன் மாற்று சொத்து வழி வகுப்பாக பசுமை முறிகளில் முதலீடு செய்வதில் கவனம் செலுத்த கூடாது என்ற கேள்வி எழுகிறது. அவற்றுக்கான காரணங்கள் பின்வருமாறு;

- **மிகவும் பொறுப்புமிக்க முதலீட்டில் ஈடுபடுவதற்கான இயலுமை -** பசுமை முறிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் நிலைபேண்தகுமிக்கதும் பொறுப்புவாய்ந்ததுமான முதலீட்டின் ஒரு பாகமாக இருப்பதிலும், முதலீட்டுப் பகுப்பாய்வின் பாகமாக சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைப் பிரமாணத்தை கூட்டிணைப்பதற்கு ஓய்வூதிய நிதியங்களுக்கு வசதியளிக்கின்றது. ஓய்வூதிய நிதியங்கள் ஓய்வூதியத்திற்குப் பின்னரான செல்வத்தின் முக்கிய மூலமாக செயற்படுவதனால் முதலீட்டு பிரமாணம் ஒன்றாக நிலைபேண்தகுமிக்கதும் பொறுப்புவாய்ந்ததுமான முதலீடு (SRI) மற்றும் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை (ESG) வழிகாட்டல்கள் என்பவற்றின் பிரயோகம் அதிக நிலைபேண்தகு முதலீடுகளை பேணி வளர்ப்பதில் மிகுந்த பெறுமதியை சேர்க்கின்றது.
- **முதலீட்டு வாய்ப்பின் ஏற்புத்தன்மை -** பசுமை முறிகள் பெரும்பாலும் ஓய்வூதிய நிதிய இலக்குகளுடன் நன்றாகப் பொருந்துகின்ற நீண்ட கால வாய்ப்புக்களுடன் கருத்திட்டங்களில் முதலிடப்படுகின்றன.
- **போட்டிமிக்க ஆதாயங்களை ஈட்டுதல்** - பசுமை, சமூக மற்றும் நிலைபேண்தகு சுட்டெணிற்கான 2023ஆம் ஆண்டின் ஆதாயம் 9.94 சதவீதமாகும். இது உலகளாவிய மொத்த முறிச் சுட்டெண்ணை விட 423 அடிப்படைப் புள்ளிகள் அதிகமாக காணப்பட்டு, நிலைபேண்தகு தன்மையை மையப்படுத்திய முதலீட்டிற்கான விருப்பத்தைக்கொண்ட முதலீட்டாளர்களுக்கான அதிக ஆதாயத்தை எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, பசுமை முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் ஊடாக பாரம்பரிய முறிகளுக்கு ஒப்பாக போட்டிமிக்க ஆதாயத்தை அடைந்துகொள்ள முடியும.

- **வரி ஊக்குவிப்புக்கள் -** பசுமை முறிகள் வரி விலக்கு மற்றும் வரி வரவுகள் எனும் வடிவத்தில் வரி ஊக்குவிபபுக்களை வழங்கலாம்.
- **நன்மதிப்புசார் நன்மைகள் -** பசுமை முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ஓய்வூதிய நிதிகளானவை சமூக பொறுப்புவாய்ந்த முதலீட்டில் ஈடுபடுவதாக கருதப்படுகின்றன. எனவே, செய்யப்படும் முதலீடுகளிலிருந்து நன்மதிப்புசார் நன்மைகளை விளைவிக்கும்.
- **இடர்நேர்வுகளை குறைப்பதற்கான வாய்ப்பு** - காலநிலை மாற்றங்களினால் நிதியியல் இடர்நேர்வுகள் ஏற்படுகின்றன. பசுமை முறிகளானவை சூழலுக்கு நேயமான திட்டங்களில் முதலீடு செய்வதை இலக்காக கொண்டிருப்பதனால், காலநிலை மாற்றங்களால் உருவெடுக்கும் இடர்நேர்வுகளை முறியடிப்பதற்கு இது துணைபுரிகின்றது.
- **ஒழுங்குமுறைப்படுத்தல் ஆதரவு** - நிலைபேண்தகு நிதியிடலுக்கான அதிகரித்த ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கொள்கை ஆதரவு என்பவற்றினால் பசுமை முறிகள் கவர்ச்சிகரமான முதலீட்டு மூலமாக தோற்றம் பெற்றுள்ளன.
- **அங்கத்தவர் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல் -** ஓய்வூதிய நிதிய அங்கத்தவர்கள் பசுமை முறிகளின் அதிகரித்த பிரபல்யம் காரணமாக அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ளப்படவேண்டுமென அதிகரித்தளவில் கோரிக்கையிடுவார்கள்.

**இலங்கையின் பின்னணியில் பசுமை முறிகளுக்கான ஆளுகைக் கட்டமைப்பு**

தற்காலத்தில், நிலைபேண்தகு முறிகள் தொடர்பாக பின்வரும் பட்டியலிடல் விதிகளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை உருவாக்கியுள்ளது. நிலைபேண்தகு முறிகளை வழங்குபரை மதிப்பீடு செய்கின்ற போது இவ்விதிகள் கவனத்திற்கொள்ளப்படும்.

அதற்கமைய, நிலைபேண்தகு முறிகளை வழங்க விரும்பும் நிறுவனம் 2 ஆம் பிரிவின் 2.2.1 ஆம் விதியில் (மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பார்க்க. https://cdn.cse.lk/pdf/listing-rules/Section-2-Updated-as-at-Jan-2024.pdf) குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக கீழே உள்ள பிரமாணத்தை பூர்த்திசெய்தல் வேண்டும்:

அ. நிலைபேண்தகு முறிகள் வழங்கல் ஊடாக திரட்டப்படும் நிதியங்கள் கீழே 2.2.1(1)(ஆ) விதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பரிவர்த்தனை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேண்தகு முறிகள் மீதான பன்னாட்டு தரநியமங்களுக்கமைய (இதனகத்துப்பின்னர் “நிலைபேண்தகு முறி நியமங்கள்” என குறிப்பீடுசெய்யப்படும்) புதிய அத்துடன்/ அல்லது ஏற்கனவே காணப்படுகின்ற தகைமையுடைய நிலைபேண்தகு கருத்திட்டங்களுக்கு நிதியிடுவதற்கு அல்லது மீள்நிதியிடுவதற்கு முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும.

ஆ. நிலைபேண்தகு முறிகளை வழங்க விரும்பும் நிறுவனம் பின்வரும் பன்னாட்டு நிலைபேண்தகு முறி நியமங்களில் ஆகக்குறைந்தது ஒன்றையாவது (01) கடைப்பிடித்தல் வேண்டும்.

(i) பசுமை மற்றும் சமுத்திரம்சார் முறிகளுடன் தொடர்புடையதாக பன்னாட்டு மூலதன சந்தைகள் அமைப்பினால் வழங்கப்பட்ட கொள்கைகள்

(ii) ஐரோப்பிய பசுமை முறி நியமம்

(iii) காலநிலை முறிகள் ஆரம்பமுயற்சி நியமங்கள் (CBI நியமங்கள்)

இ. நிலைபேண்தகு முறிகளை வழங்க விரும்பும் நிறுவனமானது அதனை வழங்குவதற்கு முன்னர் சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கையை வழங்குவதற்காக சுயாதீன வெளிவாரி உறுதிப்படுத்துநரை (இதன்பின்னர் “வெளிவாரி உறுதிப்படுத்துநர்” என குறிப்பீடுசெய்யப்படும்) நியமிக்க வேண்டும்.

மேலும், பட்டியலிடல் விதிகளின் 3 ஆம் பிரிவின் மேலதிக 3.2, 3.3, 3.4 மற்றும் 3.5 ஆம் விதிகள் (மேலதிக விபரங்களுக்கு https://cdn.cse.lk/pdf/listing-rules/Section-3-Updated-as-at-Jan-2024.pdf தயவுசெய்து பார்க்க) மற்றும் பட்டியலிடல் விதிகளின் 7 ஆம் பிரிவின்

7.6 மற்றும் 7.13.3ஆ விதிகள் (மேலதிக விபரங்களுக்கு https://cdn.cse.lk/pdf/listing-rules/Section-7-Continuing-Listing-Requirements.pdf தயவுசெய்து பார்க்க) என்பனவும் பசுமை முறிகளை பட்டியலிடும் போது பின்பற்ற வேண்டிய சில பிரமாணங்களைக் குறிக்கின்றன.

**இலங்கையின் பின்னணிக்கான ஏற்புத்தன்மை**

தற்காலத்தில் இந்நாட்டிலுள்ள மிகப்பெரிய ஓய்வுகால நிதியமான ஊழியர் சேமலாப நிதியம் (நிதிய அளவு ரூ. 4.3 றில்லியன்) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (நிதிய அளவு ரூ. 514.22 பில்லியன்) என்பன மாற்றுவழி முதலீட்டு வாய்ப்புக்களை நாடுகின்றன. இந்நிதிகளில் பாரியளவிலான தொகை திறைசேறி முறிகளில் முதலீடு செய்யப்படுவதால், மேற்படி காரணிகளை கவனத்திற்கொள்கின்ற வேளை, பசுமை முறிகளானவை சாத்தியமான முதலீட்டுத் தெரிவுகளாக காணப்படும். பசுமை முறிகளில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதில் பின்வரும் விடயங்களை கவனத்திற்கொள்ள முடியும்;

1. பசுமை முறிகளுக்கு சந்தையில் கிடைக்கப்பெறுகின்ற வாய்ப்புக்களை புரிந்துகொள்ளல் - வழங்கல்கள் மேற்கொள்ளப்படும் நாணயங்களும் வழங்குநர்களும் பசுமை முறிகளில் முதலீடுகளைச் செய்யும் ஓய்வூதிய நிதியத்திற்கு பொருத்தமுடையதாக இருக்க வேண்டும்.
2. முதலீட்டுப் பிரமாணத்தை நிர்ணயித்தல் - கருத்திட்ட வகைகள், புவியியல் நோக்கு மற்றும் இடர்நேர்வு மட்டங்கள் போன்ற பசுமை முறி முதலீடுகளுக்கான பிரமாணத்தை வரைவிலக்கணம் செய்தல்.
3. நிபுணர்களின் உதவியைப் பெறல் - பசுமை முறிகளை இனம்காண்பதற்காக பசுமை முதலீட்டில் நிபுணர்களுடன் பணியாற்றல்.
4. தொடர்ச்சியான செயலாற்றுகையை கண்காணித்தல் - பசுமை முறிகள் முதலீட்டு நோக்கங்களை அடைந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்த பசுமை முறிகளின் செயலாற்றுகையை கிரமமாக கண்காணித்தல் அவசியமாகும்.

**பசுமை முறிகளில் முதலீடு செய்வதுடன் இணைந்த சவால்கள்**

1. பசுமை முறிகளின் தரமிடலானது வழங்குநரின் கொடுகடன் தரமிடலில் தங்கியிருப்பதுடன், வழங்குபவருக்கு ஒப்பான அதே இடர்நேர்வு தோற்றப்பாட்டைக் கொண்டிருக்கும். ஆகையினால், பசுமை முறிச் சந்தை விரைவான வேகத்தில் அபிவிருத்தியடைகின்ற போதிலும் உயர்தர சந்தை வாய்ப்பை கண்டறிவது சவால்மிக்கதாக இருக்கலாம்.
2. பசுமை முறிகள் மூலமாக வழங்கப்படும் நிதிகள் உண்மையாகவே சுற்றாடல் சார்ந்த நல்வாழ்வுக்கு பயன்படுத்தப்படுவதுடன், வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இது "பசுமை" எண்ணக்கரு வெறுமனே சந்தை நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கானதாகும்.
3. வலுவான அளவீட்டையும் அறிக்கையிடலையும் கடைப்பிடித்தல் - முதலீடுகளின் சூழலியல் தாக்கத்தை அளவீடு செய்வதற்கும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் ஆற்றல்வாய்ந்த அளவீடுகளை மேம்படுத்தல்.

எனவே, பசுமை முறிகள் பற்றிய மேற்படி அம்சங்களை கருத்திற்கொள்கின்ற வேளை, இப்பசுமை முறியை ஏதேனும் ஓய்வூதிய நிதிக்கான சொத்து வகுப்பின் வளம்பெறத்தக்க மூலமாக கருதமுடியும். எனினும், இதனை ஒரு மாற்றீட்டு சொத்து வகுப்பாக கருத்திற்கொள்வதாயின், சரியாக அமுல்படுத்தப்படும் இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டல்களுடன் எவரேனும் ஏனைய முறி வழங்குநருக்கு ஒப்பாக வழங்குநரின் கொடுகடன் தோற்றப்பாட்டு தொடர்பாக முன்மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை கவனத்திற்கொள்தல் வேண்டும்.

**உசாத்துணை**


*International Capital Market Association (ICMA): The ICMA provides data on the issuance of green bonds globally, including trends and analysis.*

*Climate Bonds Initiative (CBI): CBI is a key source of information on the green bond market, offering reports and statistics on green bond issuance and investments.*

*OECD Reports on Pension Fund Investments: The Organisation for Economic Co-operation and Development (OECD) publishes reports on pension fund investments, including their involvement in sustainable finance.*

*Regulatory Bodies and Industry Reports: Various regulatory bodies and industry reports provide insights into the growing trend of sustainable investments by pension funds.*

*Financial News Outlets: News articles and analyses from reputable financial news outlets like Bloomberg, Financial Times, and Reuters often report on the latest developments in the green bond market.*

# இலங்கையில் வங்கித்தொழில் துறையில் நிறுவன ஆளுகையை மேம்படுத்தல்


**கே கே சுபசிங்க,** உதவிப் பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

**எச் எச் ரி பி சமரகோன்,** உதவிப் பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

**டபிள்யு கே சந்திமலி,** உதவிப் பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்


## 1. அறிமுகம்

ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்கள், நிதியியல் நிறுவனங்கள், சந்தைகள், சாதனங்கள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை, சட்ட கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய நாடொன்றின் நிதியியல் முறைமை நவீன பொருளாதார உலகில் முக்கிய வகிபங்கினை ஆற்றுகின்றது. இது சேமிப்பாளர்கள் மற்றும் கடன்பெறுநர்களுக்கிடையிலான நிதியங்களின் வினைத்திறன்மிக்க பாய்ச்சலை வசதியளிக்கும் நிதியியல் இடையீட்டுச் செயன்முறையை இயலுமைப்படுத்தி, இதனூடாக பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதை நோக்கி நிதியியல் வளங்கள் செயல்திறன்மிக்க வகையில் ஒதுக்கீடு செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது. கடந்த சில தசாப்தங்களில், உலகமயமாக்கல் மற்றும் நிதியியல் தாராளமயமாக்கத்தின் முக்கிய பெறுபேறுகளில் ஒன்றாக நிதியியல் துறைகளின் பருமன் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் அளவுகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்புக்களை அவதானிக்கலாம். நிதியியல் ஒருங்கிணைப்பின் அதிகரித்த மட்டங்களுடன் இணைந்தே நிதியியல் முறைமையினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்குமான இடர்நேர்வுகள் மற்றும் அதிர்வு ஊடுகடத்தல் நிகழக்கூடும். நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு ஈடுகொடுக்க இயலுமாக இருக்கின்ற பாதுகாப்பான மற்றும் தீங்கற்ற நிதியியல் முறைமையொன்றாகும். உறுதியான நிதியியல் முறைமையானது, வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கி, நிதியியல் நிறுவனங்களும் சந்தைகளும் செயல்திறன்மிக்க மற்றும் வினைத்திறனான வகையில் தொழிற்படுதை ஊக்குவிப்பதனூடாக, முதலீடுகளையும் பொருளாதார வளர்ச்சியையும் தூண்டுகின்றது. நிதியியல் உறுதியின்மையும் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கங்களும் பொருளாதாரத்தின் ஏனைய பாகங்களுக்கான அவற்றின் பரவும் அல்லது கசிவுத்தாக்கங்கள் காரணமாக பெரும் இழப்புமிக்கதாக இருக்கும்.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியிருக்கும் இலங்கையின் வங்கித்தொழில் துறை, நிதியியல் முறைமையில் ஆதிக்கம் செலுத்துவதாகவும், நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்களில் பெரும் பங்கிற்கு வகைகூறுவதாகவும் காணப்படுகின்றது. ஆகவே, இலங்கையின் நிதியியல் முறைமையின் ஆரோக்கியம், உரிமம்பெற்ற வங்கிகளின் ஆற்றல்வாய்ந்த தன்மையிலேயே அதிகளவு தங்கியிருக்கிறது. கடந்த தசாப்தங்களில், இலங்கையின் வங்கித்தொழில் துறை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பொருளாதார அதிர்வுகளுக்கு அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டிய அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்று என்பவற்றினால் வலுவான பேரண்டப்பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமாக பங்களித்தது.

## 2. நிறுவன ஆளுகை என்பது என்ன?

நிறுவன ஆளுகைச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் தனிப்பட்ட வங்கிகளின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்தத்தன்மை என்பவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் வங்கி வணிகத்தின் நடத்தையை பொறுப்புமிக்க மற்றும் வகைகூறும் விதத்தில் வசதிப்படுத்தி, இதன்மூலம் அனைத்து வங்கித்தொழில் துறையினதும் உறுதிப்பாட்டிற்கு வழிவகுக்கும் முகாமைத்துவ கட்டமைப்பாக கொள்ளப்படல் வேண்டும். நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்தல், முதலீட்டாளர்களை பாதுகாத்தல், மற்றும் நிதியியல் துறையில் பொதுமக்கள் நம்பிக்கையினை அதிகரித்தல் என்பவற்றிற்கு இலங்கையின் வங்கித்தொழில் துறையில் நிறுவன ஆளுகையை மேம்படுத்தல் அத்தியாவசியமாக விளங்குகின்றது. வலுவான ஆளுமை கட்டமைப்புக்களானவை குறிப்பாக நிதியியல் துறையில் முக்கியமாக விளங்குகின்ற இடர்நேர்வுகளை குறைத்தல், ஒழுக்கம்சார்ந்த நடத்தையை ஊக்குவித்தல், மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல் என்பவற்றிற்கு உதவுகின்றன.

## 3. இலங்கையில் நிறுவன ஆளுகை அமைப்பின் பரிணாம வளர்ச்சி

நிறுவன ஆளுகை எனும் சொற்பதம் வழக்கத்தில் பிரயோகிக்கப்படாத போதும், சாதி முறைமை மற்றும் அதிகாரப்படி நிலை அடிப்படையில் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிறுவன ஆளுகை பற்றிய வரலாறு இலங்கையின் மன்னர் ஆட்சிக்கு முற்பட்டதாக காணப்படுகின்றது. மேலும், தொழிலாளர்கள் கீழ் மட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருந்த அதேவேளை காணி உரிமையாளர்கள் உயர் சாதிகளைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். அவர்களை ஆள்வதற்கு தமக்கே உரிய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் அவர்கள் கொண்டிருந்தனர்.

காலணித்துவ காலப்பகுதியும் இலங்கையில் நிறுவன ஆளுகை நடத்தைகளின் அபிவிருத்தி தொடர்பில் முக்கியத்துவம் வகிக்கிறது. நிறுவன அமைப்புகளை தாபித்ததன் மற்றும் நாட்டில் பங்கு வர்த்தகத்தை அறிமுகப்படுத்தியதன் காரணமாக, 1796 முதல் 1948 வரையிலான காலப்பகுதியில் ஆளுகை அபிவிருத்தியைக் காணக்கூடியதாகவிருந்தது. குறித்த காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வருவன இதற்குச் சான்றுப்பகர்கின்றன:

- அனைத்து வணிக மற்றும் கடல்சார் கருமங்கள் மீதும் ஆங்கிலச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கு இயற்றப்பட்ட 1852ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க குடிசார் சட்ட கட்டளைச்சட்டம்.

- பங்கு வர்த்தகம் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்ட 1861ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கூட்டுப்பங்கு கம்பனிகள் கட்டளைச்சட்டம்;

- 1896ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட பங்குத்தரகர் சங்கம், 1904 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குத்தரகர் சங்கம் என மீளப் பெயரிடப்பட்டது (கொழும்பு பங்கு பரிவர்த்தனை, 2016).

- 1938ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் நிறுவப்பட்டது. அதன் முக்கிய செயற்பணி நிறுவன அமைப்புகளுக்கு உரிமம் வழங்குவதும் ஒழுங்குமுறைப்படுத்துவதும் ஆகும்.

குறித்த காலப்பகுதியில் நிறுவன ஆளுகை எனும் சொற்பதம் வழக்கத்தில் பிரயோகிக்கப்படாத போதும், நிறுவன அமைப்புகளின் முறையான ஆளுகை தொடர்பில் மேற்கூறிய நியதிச்சட்டங்களும் நிறுவனங்களும் முக்கிய பங்காற்றின.

1977ஆம் ஆண்டில் திறந்த பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தியமை இலங்கையின் ஆளுகை கட்டமைப்பின் வளர்ச்சியின் மற்றொரு மைல்கல்லாக அமைந்தது. அத்துடன், கம்பனிகள் வெவ்வேறு வணிக நோக்கங்களுக்காக நிறுவப்பட்டதோடு, மேலும் நிறுவன அமைப்புகளை ஆளுகை செய்வதற்கென இயற்றப்பட்ட 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் உள்ளிட்ட புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நிறுவன ஆளுகை எனும் சொற்பதம் வழக்கத்தில் பிரயோகிக்கப்படாத போதும், வெளிப்படுத்துகை தேவைப்பாடுகள் (உ-ம். பணிப்பாளரின் வயதை வெளிப்படுத்துதல், ஒப்பந்தங்களில் பணிப்பாளரின் நலன், பங்குகளின் கைமாற்றதுடன் தொடர்புபட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள்) சபை பொறுப்புகள், பங்குடமையாளர்களின் கூட்டங்களை நடாத்தும் நடைமுறைகள் மற்றும் கணக்காய்வு நடைமுறைகள் போன்ற ஆளுகை நடைமுறைகள் சொல்லப்பட்ட சட்டங்களில் கூட்டிணைக்கப்பட்டன.

1985ஆம் ஆண்டில் கொழும்பு தரகர் சங்கம் மற்றும் பங்குத்தரகர் சங்கத்தை ஒருங்கிணைத்ததன் மூலம் கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை லிமிடெட் தாபிக்கப்பட்டது. இது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் நியதிகளுக்கு அமைய தாபிக்கப்பட்டு, உத்தரவாதமொன்றால் வரையறுக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உரிமமளிக்கப்பட்ட கம்பனி ஒன்றாகும். பின்னர், இது கொழும்பு பங்கு பரிவர்த்தனையாக உருவாக்கப்பட்டு, மேலும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான ஏற்புடைய விதிகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்து, அத்தகைய நிறுவனங்களின் ஆளுகை கட்டமைப்பையும் மேம்படுத்துகிறது.

1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திதை அனுசரித்து, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. பிணையங்களை ஒழுங்கான மற்றும் நியாயமான முறையில் வர்த்தகம் செய்வதற்கான சிறந்த சந்தையொன்றை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல், பிணையங்கள் சந்தையை ஒழுங்குப்படுத்தல், மற்றும் அத்தகைய சந்தையில் தொழில்சார் தரநியமங்களை உறுதி செய்தல் என்பன இச்சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இக்குறிக்கோள்களை பகுப்பாய்வு செய்கின்ற போது, மேற்குறித்தவற்றின் நோக்கு பிணையங்கள் சந்தையினதும் அதன் பங்கேற்பாளர்களினதும் முறைமையான ஆளுகையை மேம்படுத்துவது ஆகும்.

பின்னர், 1991ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க சட்டம், 2003ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க சட்டம் மற்றும் 2009ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் என்பன மூலம் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைகுழுச் சட்டம் திருத்தப்பட்டது. இச்சட்டங்கள் அனைத்தும் பங்குரிமை மூலதனச் சந்தையில் ஆளுகை நடத்தைகளை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கின்றன.

1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் 1995 இல் இயற்றப்பட்டது. இலங்கையில் ஆளுகை கலாசாரத்தை உருவாக்குவதிலும் இச்சட்டம் முக்கியத்துவம் பெறுவதுடன், இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய நடவடிக்கைகளில் 1) இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களை உருவாக்க இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தை வலுவூட்டல் மற்றும் 2) இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையை நிறுவுதல் என்பன அடங்கும்.

1997 திசெம்பரில், "சிறந்த நடத்தைக் கோவை: நிறுவன ஆளுகை பற்றிய நிதியியல் அம்சங்களுடன் தொடர்புடைய கருமங்கள்" எனும் முதலாவது முறைசார்ந்த நிறுவன ஆளுகைக் கோவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. இது இலங்கையின் நிறுவன ஆளுகை வரலாற்றின் திருப்புமுனையொன்றாகும். அவ் அறிக்கைக்கு இசைந்து செல்லும் வகையில், பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு மற்றும் பொறுப்புகள், கணக்காய்வாளர்களின் வகிபங்கு மற்றும் பங்குடமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் போன்ற முக்கிய நிறுவன ஆளுகைக் கோட்பாடுகள் இவ் உள்நாட்டு கோவையில் உள்ளடக்கப்படுகின்றன. இது நிறுவன ஆளுகை பற்றிய தன்னார்வ கோவையொன்றாகும். அதன் பின்னர், 2001 இல், இலங்கையின் பட்டயச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நிறுவனம் "நிறுவன ஆளுகை மீதான கைந்நூல்: இலங்கையில் சிறந்த நடத்தைக்கான கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்" என்ற நூலை வெளியிட்டது.

2002 மேயில், நிறுவன ஆளுகை பற்றிய தன்னார்வ கோவையொன்றான "கணக்காய்வு குழுக்களின் மீதான சிறந்த நடத்தை" என்ற கோவையை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் வெளியிட்டது. கணக்காய்வு குழுக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் இக்கோவையில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அதே ஆண்டில், இலங்கை மத்திய வங்கி "வங்கிகள் மற்றும் பிற நிதியியல் நிறுவனங்களுக்கான நிறுவன ஆளுகைக் கோவை" இனை வெளியிட்டது. நிறுவன ஆளுகை பற்றிய உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு இக்கோவை வரையப்பட்டதுடன், பணிப்பாளர்கள், தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர் ஆகியோரின் தகைமை, முதன்மை நிறைவேற்று அலுவலர், மூத்த நிர்வாகம் மற்றும் கம்பனிச் செயலாளர் ஆகியோரின் வகிபங்கு, பணிப்பாளர்களின் பயிற்சி/பரீட்சயமடைதல், சபைக்கான குழுக் கட்டமைப்பு, வெளிப்படைத்தன்மை, இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் முன்மதியுடைய ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை போன்ற சபையுடன் தொடர்புடைய நிறுவன ஆளுகை பற்றிய 12 அடிப்படைக் கோட்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இது நிறுவன

ஆளுகை பற்றிய தன்னார்வக் கோவையொன்றாவதுடன், நிதியியல் முறைமையின் நேர்மையையும் உறுதிப்பாட்டையும் பேணும்பொருட்டு அனைத்து வங்கிகளும் அவற்றை ஏற்றுநடக்க வேண்டப்பட்டிருந்தன.

2003 சனவரியில், "இலங்கையில் பொது தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை பற்றிய சிறந்த நடத்தைக் கோவை" நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது. நியதிச்சட்டசபைகளையும் பொது தொழில்முயற்சிகளின் நிறுவன ஆளுகையையும் மேம்படுத்த இது உருவாக்கப்பட்டது. 2003 மாச்சில், 1997இல் வெளியிடப்பட்ட முன்னைய கோவையை மாற்றீடு செய்வதன் மூலம் "நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை" இனை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் வெளியிட்டது. பணிப்பாளர்களின் வகிபங்கு, பணிப்பாளர்களின் ஊதியம் மற்றும் பங்குடமையாளர்களின் வகிபங்கு, கணக்காய்வு மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற இங்கிலாந்தின் 1998 ஆம் ஆண்டின் ஹம்பல் கோவையினை இக்கோவை பின்பற்றியிருப்பதாக தோன்றுகின்றது.

2004 மேயில், கணக்காய்வு மற்றும் கணக்காய்வு குழுக்கள் மீதான பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான வழிகாட்டல்களை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு வெளியிட்டது. 2002 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் வழிகாட்டி, விரிவானதும் பரந்ததுமான இரு நியதிகளிலும் கணக்காய்வின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதொன்றாக காணப்படாததால், இவ்வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. எவ்வாறாயினும், இவ்வழிகாட்டல்கள் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு கட்டாயமானதல்ல. 2007 மாச்சில், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பவற்றின் ஆதரவுடன் நிறுவன ஆளுகை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பட்டியல் விதிகளுள் உள்ளடக்கப்பட்டது. இது கட்டாய விதிகளின் தொகுதிகளாக இரு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆரம்ப கட்டத்தில், பட்டியலிடும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன ஆளுகை பற்றிய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகின்றன என 2007 ஏப்பிறல் 1 முதல் தொடங்கும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் உறுதிப்படுத்தலை வெளியிடுவதற்கு இணங்கியொழுக வேண்டப்பட்டிருந்தன. இல்லாவிடின், "இணங்கியொழுதல் அல்லது விளக்கமளித்தல்" கோட்பாடுகளின் அடிப்படையில் இணங்கியொழுகாததற்கான விளக்கத்தினை அளிக்க வேண்டப்பட்டிருந்தன. இரண்டாவது கட்டத்தில், பட்டியலிடல் விதிகளுடன் இணங்கியொழுக கட்டாயமாக்கியுள்ளதுடன், 2008 ஏப்பிறல் 1 முதல் தொடங்கும் நிதியாண்டுடன் தொடர்புடைய ஆண்டறிக்கையில் இணங்கியொழுதலை உறுதிப்படுத்தும் அறிக்கையை வெளியிட வேண்டப்பட்டிருந்தன. இலங்கையில் நிறுவன ஆளுகை கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட கண்டிப்பான முயற்சியாக இதனை நோக்கலாம்.

2007 திசெம்பரில், இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகள் மீது இரு பணிப்புரைகளை கொண்ட தொகுதியை வெளியிட்டது. (அதாவது ஒன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீதானதும் மற்றொன்று உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மீதானதும் ஆகும்). உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (இலங்கை மத்திய வங்கி, 2013அ) மீது வெளியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரை பின்னர் 2008 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க, 2008ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க மற்றும் 2013ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரைகளால் திருத்தப்பட்டது. மேலும், அத்தகைய பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன ஆளுகை கோட்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தும் வழிகாட்டல்கள் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டுள்ளதுடன், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் நிறுவன ஆளுகை தொடர்பாக 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிப்புரை வெளியிடப்பட்டு, பின்னர் இது 2008ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, 2008ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க மற்றும் 2013ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க (இலங்கை மத்திய வங்கி, 2013ஆ) பணிப்புரைகளால் திருத்தப்பட்டது.

மேலும், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டம் இயற்றப்பட்டமை நிறுவன ஆளுகையின் வளர்ச்சியுடன் தொடர்புடைய முக்கிய முன்னெடுப்பொன்றாக அவதானிக்கப்பட்டது. இலங்கையின் நிறுவன ஆளுகை கலாசாரத்தை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் பல விடயப்பரப்புக்கள் குறித்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2008 யூனில், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனமும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் இணைந்து "நிறுவன ஆளுகையின் சிறந்த நடைமுறைக் கோவை" இனை

வெளியிட்டன. இதுவும் நிறுவன ஆளுகையின் தன்னார்வ கோவையொன்றாகும். கம்பனியின் வெற்றிக்கான தனியொரு சபையின் கூட்டாகப் பொறுப்பு, நிறுவனத்தின் நலனை நோக்கிய பணிப்பாளர்களின் குறிக்கோள், குவிந்த அதிகாரங்களை தவிர்த்தல், நியமனம் மற்றும் ஊதியம் பற்றிய வெளிப்படைத்தன்மை மற்றும் பங்குடமையாளர்களின் பயனுறுதிவாய்ந்த உரிமைகள் என்பன கோவையில் விவரிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் ஆகும். 2008 யூலையில், பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வு தொழிற்பாடுகளின் செயற்திறனை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வாளர்களின் நியமனத்துக்கான தனி வழிகாட்டுதல்களை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு வெளியிட்ட அதேவேளை, நிதிசார் அறிக்கையிடலின் வெளிப்படைத்தன்மை, செம்மை, நம்பகத்தன்மை மற்றும் ஒத்திசைவு போன்றவற்றையும் மேம்படுத்துகிறது. மேலும், இவ் வழிகாட்டல்கள் மூலம் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் இடர்நேர்வுகள் முகாமைத்துவ செயல்முறை மேம்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் நிறுவன ஆளுகை நியமங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2009 சனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை மத்திய வங்கி 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதி கம்பனிகள் (நிறுவன ஆளுகை) பணிப்புரையை அதே ஆண்டில் வெளியிட்டது. 2009 இல், நிதி குத்தகை நிறுவனங்களின் நிறுவன ஆளுகையை மேம்படுத்துவதற்காக 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்திற்கு அமைவாக 2009ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதி குத்தகை (நிறுவன ஆளுகை) பணிப்புரை இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது. இப்பணிப்புரை 2010 சனவரி 01 முதல் நடைமுறைக்கு வந்தது.

2013இல், நிறுவன ஆளுகை பற்றிய சிறந்த நடத்தைக் கோவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் இணைந்து வெளியிடப்பட்டது (இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, 2013). முன்னைய கோவையோடு இக்கோவையை ஒப்பிடும் போது, இப்பதிப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய திருத்தங்களில் உள்ளக கட்டுப்பாடுகள், இடர்நேர்வுகள் முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுக்களின் பொறுப்புகள், ஊதியக் குழுவிற்குரிய தேவைப்பாடுகள், நிறுவனத்தின் நிறுவன ஆளுகை தொடர்பாக கம்பனி செயலாளரின் வகிபங்கு, பங்குடமையாளர்களுடனான தொடர்பூட்டல் மற்றும் நிலைபெறுத்தன்மை அறிக்கையிடல் என்பன அடங்கும்.

நிறுவன ஆளுகை பற்றிய சிறந்த நடத்தைக் கோவையின் ஐந்தாவது பதிப்பு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 திசெம்பரில் வெளியிடப்பட்டது (இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், 2017). உலகளாவிய அபிவிருத்திகளுக்கு ஆளுகை பற்றி வளர்ந்து வரும் சமகால விடயங்கள் மற்றும் இலங்கையில் மூலதன சந்தையில் காணப்படுகின்ற சவால்கள் என்பவற்றிற்கு இசைவாக இலங்கையில் நிறுவன ஆளுகையை வலுப்படுத்த இக்கோவை உருவாக்கப்பட்டது. இதனடிப்படையில், சபை உள்ளமைப்பு, சபைக் கூட்டங்கள், சபையின் வகிபங்கு மற்றும் கணக்காய்வு குழு சாசனத்துடன் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல் குழு, இணைய பாதுகாப்பு குறித்து முறைப்பாடு மேற்கொள்வதற்கான தேவைப்பாடு மற்றும் சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகைக்கான தேவைப்பாடுகள் போன்ற புதிய முயற்சிகளுடன் இணைத்து இக்கோவையின் கீழ் புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வங்கிகளின் நிறுவன ஆளுகை செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்தும் நோக்கில், 2025.01.01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2024ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கியுள்ளது (இலங்கை மத்திய வங்கி, 2024). உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட இப்பணிப்புரைகள் அனைத்தும் பொதுவாக 1). சபையின் பொறுப்புகள், 2). சபை உள்ளமைப்பு, 3). பணிப்பாளர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகைமை தேவைப்பாடுகளை மதிப்பிடுவதற்கான பிரமாணங்கள், 4). சபையினால் பொறுப்பளிக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள், 5). தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர், 6). சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள், 7). தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் 8). வெளிப்படுத்துகை தேவைப்பாடுகள் தொடர்பான கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை நோக்குகையில், இலங்கையில்

நிறுவன ஆளுகை பற்றிய பரிணாம வளர்ச்சியில் மேற்கூறியவை முக்கிய முன்னேற்றங்களாகும்.

**4. நிறுவன ஆளுகை ஏன் வங்கித் தொழில்துறையில் முக்கியத்துவம் பெறுகிறது?**

கீழ் குறிப்பிட்டுள்ளதன்படி பல முக்கிய காரணங்களுக்காக வங்கித் தொழில்துறையில் நிறுவன ஆளுகை குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது:

- **நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்தல்:** வங்கிகள் பொருளாதாரத்தின் செல்வத்தில் குறிப்பிடத்தக்க பகுதியை வைத்திருப்பதுடன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டில் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றது. வங்கிகள் ஆற்றல்வாய்ந்ததாக தொழிற்படுவதை உறுதிப்படுத்தல், இடர்நேர்வுமிக்க நடைமுறைகளைத் தவிர்த்தல், நிதியியல் ஆரோக்கியத்தை பேணுதல் போன்றவற்றினூடாக சாத்தியமான நிதியியல் நெருக்கடிகளைத் தடுத்தல் போன்றவற்றிற்கு செயல்திறன்வாய்ந்த நிறுவன ஆளுகை உதவுகின்றது.
- **இடர்நேர்வு முகாமைத்துவம்:** கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு உள்ளிட்ட பல்வேறு இடர்நேர்வுகளுக்கு வங்கிகள் முகம்கொடுக்கின்றன. இவ் இடர்நேர்வுகளை தணிக்க பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக்கள், கொள்கைகள் மற்றும் மேற்பார்வை பொறிமுறைகளை வங்கிகள் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வலுவான ஆளுகை உதவுகிறது.
- **ஒழுங்குமுறைப்படுத்தலுடன் இணங்குதல்:** வங்கிகள் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களாகும். முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பரந்த பொருளாதாரம் என்பவற்றை பாதுகாக்க உதவும் பாசல் III கட்டமைப்பு, பணம் தூயதாக்கலுக்கு எதிரான சட்டங்கள் மற்றும் ஏனைய நிதியியல் தொழில்துறை நியமங்கள் போன்ற உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒழுங்குவிதிகளுடன் வங்கிகள் இணங்கியொழுகின்றன என்பதை நிறுவன ஆளுகை உறுதி செய்கின்றது.
- **பொறுப்புக்கூறலும் வெளிப்படைத்தன்மையும்:** சுயாதீன சபை மேற்பார்வை மற்றும் வெளிப்படையான நிதியியல் அறிக்கையிடல் போன்ற நிறுவன ஆளுகை பொறிமுறைகள் ஆர்வலர்களுக்கு (உ-ம்., பங்குடமையாளர்கள், ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள்) பொறுப்புக்கூறும்தன்மையை பேணுவதற்கு அத்தியாவசியமானதாக விளங்குகின்றன. இது வங்கித் தொழில்துறை மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதுடன், ஆர்வலர்களின் சிறந்த நலன்களுக்காக வங்கிகள் முகாமை செய்யப்படுகின்றன என்பதை உறுதி செய்கின்றது.
- **தவறான முகாமைத்துவத்தையும் மோசடியையும் தடுத்தல்:** வங்கிகள் பொதுமக்களின் பெருமளவு பணத்தை முகாமை செய்வதால், ஒழுக்கவியல்சாரா நடத்தை, மோசடி மற்றும் தவறான முகாமைத்துவம் என்பவற்றை தடுக்க நிறுவன ஆளுகை அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. ஆளுகைக் கட்டமைப்புகளில் குவிந்த அதிகாரங்களை தவிர்ப்பதன் மூலம் அவ்வாறான சிக்கல்களைக் கண்டறியவும் தடுக்கவும் உதவுகின்றன.
- **முதலீட்டாளர் நம்பிக்கை:** வங்கிகள் நன்கு முகாமைசெய்யப்பட்டு, நிதியியல் ரீதியான நிலையுறுதியுடன், நேர்மையாக செயல்படுகின்றன என்பதை உறுதி செய்வதன் மூலம் வலுவான ஆளுகை நடைமுறைகள் முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிக்கின்றன. இது மிகவும் கவர்ச்சிகரமான முதலீடுகளுக்கும், மூலதனத்தை மிகவும் வினைத்திறன்மிக்க வகையில் திரட்டுவதற்கான இயலுமைக்கும் வழிவகுக்கலாம்.
- **நீண்டகால வளர்ச்சியும் நிலைபெறத்தக்க தன்மையும்:** நிலைபெறத்தக்கத்தன்மை அல்லது வாடிக்கையாளர் நம்பிக்கை என்பவற்றை அழித்துவிடும் குறுகிய கால இலாபங்களில் ஈடுபடுவதை விட, வங்கிக்கு நீடித்துநிலைத்திருக்கும் நீண்டகால உபாயத்தை உருவாக்குவதில் நிறுவன ஆளுகை கவனம் செலுத்துகிறது. இது வங்கித் தொழில்துறையின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கின்றது.

சுருக்கமாக குறிப்பிடுவதாயின், வங்கிகள் வினைத்திறன்மிக்கதாகவும், பொறுப்புடனும், ஒழுக்கம் மிக்கதாகவும் பணியாற்றுவதை உறுதி செய்வதில் நிறுவன ஆளுகை முக்கிய பங்காற்றி ஆர்வலர்களையும் ஆற்றல்வாய்ந்த நிதியியல் முறைமையையும் பாதுகாக்கின்றது.

## 5. வங்கிகளில் நிறுவன ஆளுகையை வலுப்படுத்துவதில் முன்னோக்கிய பாதை

இலங்கையின் வங்கித் தொழில்துறையில் நிறுவன ஆளுகையை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு வேறுபட்ட நோக்குகளின் கீழ் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் தொடர்பாக இப்பகுதி கலந்துரையாடுகின்றது:

**சபை மேற்பார்வையை வலுப்படுத்துதல்:** சுயாதீனப் பணிப்பாளர்கள் பக்கச்சார்பற்ற நோக்குகளைக் கொண்டுவருவதாலும், முகாமைத்துவ தீர்மானங்கள் பங்குடமையாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் நலனுடன் அணிசேர்வதை உறுதி செய்வதாலும், வங்கிகள் தமது சபைகளில் பெரும்பான்மையான சுயாதீன பணிப்பாளர்களை கொண்டிருத்தல் வேண்டும். மேலும், கணக்காய்வு, இடர்நேர்வு மற்றும் ஊதியக் குழுக்கள் போன்ற சபை துணைக்குழுக்களை தாபித்தல்/ வலுப்படுத்தல் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, விஷேடத்துவமிக்க மேற்பார்வையினையும் வழங்குகின்றன. இக் குழுக்கள் சுயாதீன பணிப்பாளர்களால் தலைமை வகிக்கப்பட வேண்டும் என்பதுடன் செயல்திறன்வாய்ந்த வழிகாட்டல்களை வழங்குவதற்கும், தலைமைத்துவம் மற்றும் மூலோபாய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த தொழில்சார் நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். சபை மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கு சபை உறுப்பினர்களுக்கு கிரமமான பயிற்சி மற்றும் ஆளுகை நடைமுறைகள், நிதியியல் ஒழுங்குவிதிகள், இடர்நேர்வு முகாமைத்துவம் போன்றன தொடர்பான இற்றைப்படுத்தல்கள் அத்தியாவசியமானவையாகும். வங்கியின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றத்தை செயல்திறன்மிக்க வகையில் கண்காணிப்பதற்கு பணிப்பாளர்கள் நன்கு வசதியளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**சபை உள்ளமைப்பில் சமநிலை:** உரிமம்பெற்ற வங்கிகளின் சபை வங்கியின் பருமன், அளவு மற்றும் சிக்கல்வாய்ந்ததன்மை என்பவற்றை கருத்திற்கொண்டு தொடர்புடைய துறைகளில் திறன்கள், அறிவு, தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றை கொண்டிருக்க வேண்டும். எனவே, இத்தகைய சமநிலையைக் கொண்ட சபை சிறந்த தீர்மானங்களையும் செயற்திறன்மிக்க உபாயங்களையும் மேற்கொள்வதுடன் வங்கியின் தொழிற்பாடுகளை திறம்பட மேற்பார்வை செய்யலாம். மேலும், இத்தகைய பல்வகையான பிணைப்பு வங்கிக்கு ஆற்றப்பட்டுள்ள பல்வேறு வகையான இடர்நேர்வுகளை இனங்காண்பதில் உதவியளித்து, பிரச்சினைகளை சிறப்பாக தீர்ப்பதற்கு வழிவகுத்து, ஒருவருக்கொருவர் மத்தியில் அறிவைப் பகிர்ந்துக்கொள்கின்றது.

**வெளிப்படைத்தன்மையையும் வெளிப்படுத்துகையையும் ஊக்குவித்தல்:** வங்கிகள் நிதியியல் அறிக்கையிடலின் உயர்தர நியமத்தை கடைபிடிக்க வேண்டப்படுவதுடன் நிதியியல் அறிக்கைகள் அவற்றின் செயலாற்றம் மற்றும் நிதியியல் நிலைமை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வழங்குகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும். இடர்நேர்வு முகாமைத்துவம், நிதியியல் ஆரோக்கியம், நிறைவேற்றுத் தரங்களுக்கான ஊதியம் மற்றும் அக்கறை முரண்பாடு குறித்த கிரமமான மற்றும் வெளிப்படையான வெளிப்படுத்துகைகள் மிக முக்கியமானவையாகும். மேலும், ஆளுகைக் கட்டமைப்புகள், சபை உள்ளமைப்பு மற்றும் ஏதேனும் சாத்தியமான அக்கறை முரண்பாடுகள் உள்ளடங்கல்களாக ஆளுகை நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை வலியுறுத்தப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இணங்குவிப்பு கட்டமைப்பு:** இலங்கை மத்திய வங்கி வங்கித் தொழில்துறையை ஒழுங்குமுறைப்படுத்துவதில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. கிரமமான கணக்காய்வுகள் மற்றும் மேற்பார்வை என்பவற்றிற்கான இயலாற்றலை அதிகரிப்பதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை பங்களிப்பினை வலுப்படுத்தலானது, வங்கிகள் தேசிய மற்றும் பன்னாட்டு ஆளுகை தரங்களுக்கு இணங்கியொழுகுவதை உறுதி செய்யும். இலங்கையின் வங்கித் தொழில்துறையானது பாசல் III கட்டமைப்பு மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் பரிந்துரைகள் போன்ற நிறுவன ஆளுகையில் உலகளாவிய சிறந்த நடத்தைகளுடன் அணிசேர வேண்டும். மேலும், வங்கிகள் அனைத்து ஊழியர்களுக்கும் தெளிவான ஒழுக்கவியல் மற்றும் நடத்தைக் கோவையை உருவாக்க வேண்டும். ஒழுக்கவியல் நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கான கிரமமான கணக்காய்வுகள் மோசடி நடவடிக்கைகள் மற்றும் அக்கறை முரண்பாடுகளைக் குறைக்கும்.

**இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை வலுப்படுத்துதல்:** நிதியியல், தொழிற்பாட்டு, கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்யும் மற்றும் தணிக்கும் முன்னேற்றகரமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை வங்கிகள் நடைமுறைப்படுத்த வேண்டும். சாத்தியமான நிதியியல் இடர்பாடுகளை கண்டறிய முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளை பின்பற்றுதல்

இதில் உள்ளடங்கும். பாதகமான பொருளாதார நிலைமைகளில் வங்கிகள் எவ்வாறு செயலாற்றும் என்பதை விளங்கிக்கொள்ள வழமையான அழுத்தப் பரீட்சிப்பு மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். இது பொருளாதார சரிவுகள் மற்றும் முறைமைசார் அதிர்வுகளுக்கு எதிராக தாக்குப்பிடிக்கும் தன்மையை கட்டியெழுப்புவதில் இது உதவுகின்றது. மேலும், உள்ளக கணக்காய்வுகளையும் கட்டுப்பாட்டு தொழிற்பாடுகளையும் வலுப்படுத்தலானது, இடர்நேர்வுகள் சரியான முறையில் முகாமை செய்யப்படுவதை உறுதி செய்கின்றது. தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் மற்றும் ஆளுகை தொடர்பான பிரச்சினைகள் உடனடியாக அடையாளப்படுத்துப்படுவதற்கான மேலதிக உத்தரவாத அடுக்கொன்றினை வலுவான உள்ளக கணக்காய்வுக் குழு வழங்குகின்றது.

**பங்குடமையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் ஈடுபாட்டினை மேம்படுத்துதல்:** தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறையில் சிறியளவிலான பங்குடமையாளர்ளை பரிசீலனையில் கொள்வதானது வங்கியின் அலுவல்கள் மற்றும் செயலாற்றுகை பற்றி அவ்வாறான சிறியளவிலான பங்குடமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு தொடர்பூட்டப்படுகின்றனர் என்பதையும், அதன் மூலம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கருத்துக்களை தெரிவிப்பதற்கான சமமான வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்குவதையும் உறுதி செய்கின்றது. இது அனைவரையும் உள்ளடக்குகின்ற தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்துகின்றது. வாடிக்கையாளர்கள், ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட பங்குடமையாளர்களின் நலன்களை புரிந்து கொண்டு இனங்காண்பதை உறுதிசெய்வதற்காக, வங்கிகள் தவறாமல் அவர்களுடன் ஈடுபாட்டினை மேற்கொள்ள வேண்டும். இந்நோக்கில், வணிக செயலாற்றல், இடர்நேர்வுகள் மற்றும் ஆளுகை மேம்படுத்தல்கள் பற்றி செயலூக்கமிக்க தொடர்பூட்டல் அத்தியாவசியமாகும்.

**ஒழுங்கவியல்சார் தலைமைத்துவத்தையும் நிறுவன கலாசாரத்தையும் ஊக்குவித்தல்:** வங்கிகளின் தலைமைத்துவம் ஒழுங்கவியல்சார் நடத்தைக்கு உயர் முன்னுரிமையினை நிர்ணயிக்க வேண்டும். நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு என்பவற்றைக் கொண்ட கலாசாரம் நிறுவனம் முழுதும் உட்பொதிய செய்யப்பட வேண்டும். பழிவாங்கப்படுவதற்கான அச்சமின்றி ஒழுக்கமுறையற்ற நடத்தை அல்லது ஆளுகை பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கையிட ஊழியர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களை ஊக்குவிப்பது அவசியமாகும். முறைகேடுகளை கவனத்திற்கு கொண்டுவரும் வலுவான பொறிமுறைகளை நிறுவுதல் மோசடி, ஊழல் மற்றும் மோசமான ஆளுகை நடைமுறைகளை கண்டறிய உதவும். மேலும், வங்கியின் நிதியியல் ஆரோக்கியத்திற்கு இடர்நேர்வுகளை விளைவிக்கக்கூடிய குறுகிய கால ஆதாயங்களை ஈட்டுவதைக் காட்டிலும், நிறைவேற்று அலுவலர்களின் ஊதியப்பொதித் திட்டங்கள் போன்ற நீண்டகால செயலாற்றத்தினால் ஊக்கமளிக்கப்படல், பங்குடமையாளர்களின் நலனுடன் அணிசேர்தல் என்பவற்றிற்காக கட்டமைக்கப்படலாம்.

**கணக்காய்வாளர்களின் வகிபங்கை வலுப்படுத்துதல்:** வெளிவாரி கணக்காய்வாளர்கள் சுயாதீனமானவர்கள் மற்றும் அக்கறை முரண்பாடுகளிலிருந்து விடுபட்டவர்கள் என்பதை உறுதி செய்தல் மிக முக்கியமானதாகும். பக்கச்சார்பற்ற மதிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்காக வெளிவாரி கணக்காய்வாளர்களின் கிரமமான சுழற்சி காணப்பட வேண்டும். மேலும், வெளிவாரி கணக்காய்வாளர்கள் உயர்தரத்தவர்கள் மற்றும் வங்கித் தொழிற்பாடுகள் பற்றிய அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் துல்லியமான மதிப்பீடுகளை வழங்கின்றனர் என்பதை உறுதி செய்வதன் மூலம் வங்கியினுள் கணக்காய்வு தொழிற்பாடுகளை வலுப்படுத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, வெளிவாரி கணக்காய்வாளர்களுடனான செயற்திறன்மிக்க மற்றும் உரியகால தொடர்பூட்டல் வங்கியினுள் காணப்படுகின்ற ஏதேனும் இடர்நேர்வு/சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுப்பதில் வங்கிகளுக்கு உதவலாம்.

**தொழில்நுட்பத்திலும் புத்தாக்கங்களிலிருந்தும் உச்சபயனடைய செய்தல்:** சபைக் கூட்டங்களுக்கான டிஜிட்டல் தளங்கள், அறிக்கையிடல் மற்றும் ஆர்வலர்களின் தொடர்பூட்டல் போன்ற ஆளுகைக்கான முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல் ஆளுகை செயல்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதோடு அவற்றை மிகவும் வெளிப்படையானதாக மாற்றும். நிதியியல் சேவைகள் அதிகம் டிஜிட்டல்மயமாக்கப்படுவதால், ஆற்றல்வாய்ந்த இணைய பாதுகாப்பு கட்டமைப்புக்கள் செயற்பாட்டில் உள்ளன என்பதை வங்கிகள் உறுதிப்படுத்த வேண்டும். வாடிக்கையாளர் தரவு மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களைப் பாதுகாக்க தவறுதல்

ஆளுகை மற்றும் பொதுமக்கள் நம்பிக்கையை கடுமையாக சவாலுக்குட்படுத்தும்.

**நிறுவன சமூகப் பொறுப்பை ஊக்குவித்தல்:** வங்கிகள் நிலைபெறத்தக்க வணிக நடைமுறைகள் மற்றும் பொறுப்பான கடன் வழங்கல்களை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். நிறுவன சமூக பொறுப்பு கடப்பாடு பொதுமக்களின் அபிப்பிராயம், நற்பெயர், வங்கிகளின் நம்பிக்கை ஆகியவற்றை மேம்படுத்துவதோடு பரந்த சமூக நல்வாழ்வுக்கான அதன் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. மேலும், வங்கி கொள்கைகளை சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை பிரமாணங்களுடன் அணிசேர செய்தல் அதிகளவில் முக்கியத்துவம் பெறுகிறது. இது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது மாத்திரமன்றி, நிலைபெறத்தக்க வணிக நடைமுறைகள் தொடர்பான ஆர்வலர்களின் எதிர்பார்க்கைகளுக்கும் செவிசாய்க்கும்.

**கண்காணிப்பு மற்றும் அமுல்படுத்தல்:** இலங்கை மத்திய வங்கி போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகளின் செயற்திறன்வாய்ந்த கண்காணிப்பு ஆளுகை நியமங்களுடன் இணங்கியொழுகுவதை உறுதி செய்வதோடு சாத்தியமான குறைபாடுகளை நிவர்த்தி செய்கிறது. அல்லாவிடின் வங்கிகள் தமது பொறுப்புகளை புறக்கணிக்கக்கூடிய ஆளுகை நடைமுறைகளுடன் இணங்காததற்கான கடுமையான அபராதங்கள் வங்கிகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும். எவ்வாறாயினும், செயற்திறன்மிக்க மற்றும் வலுவான ஆளுகை கலாசாரம் வங்கிக்குள் இருப்பதை உறுதி செய்வதற்காக வங்கியின் பணிப்பாளர் சபைக்கே இறுதி பொறுப்புக்கூறல் உள்ளது என்பதைக் கவனத்திற்கொள்வது முக்கியமாகும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, ஆற்றல்வாய்ந்த நிறுவன ஆளுகை கட்டமைப்பைக் கொண்டிருத்தல் வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு கட்டாயமானதாகும். எனவே, ஆற்றல்வாய்ந்த நிறுவன கலாசாரத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, இக்கட்டுரையில் கலந்துரையாடப்பட்டதன்படி, “உயர் முன்னுரிமையை” நிர்ணயிப்பதில் சபைகள் முன்னிலை வகிக்க வேண்டும். வங்கியின் நடத்தை/ஒழுக்க கோவை, அல்லது ஒப்பிடத்தக்க கொள்கை என்பன ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகளை விளக்க வேண்டும். நிதியியல் ரீதியான தவறான அறிக்கையிடல், பணம் தூயதாக்குதல், மோசடி, போட்டிக்கு எதிரான நடத்தைகள், இலஞ்சம் மற்றும் ஊழல் அல்லது நுகர்வோர் உரிமைகளை மீறுதல் போன்ற எந்தவொரு நற்பெயர் சார்ந்த இடர்நேர்வுகள் அல்லது முறையற்ற/சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் நடத்தையை திட்டவட்டமாக அனுமதிக்கக்கூடாது. மேலும், வங்கி ஊழியர்கள் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வங்கி கொள்கைகளுடன் இணங்கியொழுகுவதற்கு மேலதிகமாக, தாமாக ஒழுக்கவியல் ரீதியாக நடந்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுவர் என்பது தொடர்பாகவும் தெளிவுப்படுத்தப்பட வேண்டும்.

**முடிவுரை**

முடிவாக, இலங்கையின் வங்கித் தொழில்துறையில் நிறுவன ஆளுகையின் வலுப்படுத்தலானது ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், வங்கிகள் மற்றும் பிற ஆர்வலர்களிடையே ஒத்துழைப்பை வேண்டிநிற்கும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நேர்மை, வலுவான இடர்நேர்வு முகாமைத்துவம், ஒழுக்கவியல்சார் தலைமைத்துவம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பு என்பவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் இலங்கை அதன் வங்கித் தொழில்துறையின் நிலைபெறும்தன்மையையும் தாக்கப்பிடிக்கும்தன்மையையும மேம்படுத்த முடியும் என்பதுடன், இதன் மூலம் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு பங்களிப்பினை வழங்கவும் முடியும். இவ்வழிமுறைகள் பொதுமக்களுக்கு நம்பிக்கையைப் புகட்டி, வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கவும், முறைமைசார் இடர்நேர்வுகளை குறைப்பதற்கு உதவியளித்து, வங்கித் தொழில்துறை வினைத்திறனுடனும் பொறுப்புடனும் தொழிற்படுவதை உறுதிசெய்யும்.